Registered as a Newspaper பக்கங்கள் : 8

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம். 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 16 31 - 12 - 94 சனிக்கிழமை ஓசை 316

## யுத்தமற்ற நிலை ஏற்பட்ட பின்பே பிரதேச செயலகங்களுக்கு அதிகாரம்

சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்று யுத்தமற்ற நிலை ஏற்படும் பட்சத்திலேயே யாழ் செயலகத்தில் உள்ள நிர்வாக அதிகாரங்கள் பிரதேச செயலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. நிர்வாகப் பரவலாக்கல் பிரதேச செயலகங்களுக்கு வழங்குவதாயின் செயலகத்தில் குவிந்திருக்கும் முக்கிய ஆவணங்கள் மற்றும் பதிவுகள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட வேண்டும். இந்த ஆவணங்களும், பதிவுகளும் 14 பிரதேச செயலகங்களுக்கு எடுத்துச்சென்று வைக்கப்படுவதால் யுத்த நிலையில் அது சேதமாகக்கூடிய அல்லது அழியக்கூடிய காணாமல் போகக் கூடிய நிலை ஏற்படலாம். பல ஆண்டு கால ஆவணங்கள் இல்லாமல் போகும் நிலையை தவிர்க்கும் நோக்குடன் அதிகாரப் பகிர்வு சம்பந்தப்பட்ட செயல்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது.

# புனரமைப்பு; பாதை திறப்பு, போர்நிறுத்தம்; புலிகள் - அரசு பேச்சுக்களில் முக்கிய இடம்



## நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தகவல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் அடுத்த வாரத்தில் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படும் பேச்சுவார்த்தையில் தமிழ் பிரதேசங்களின் புனரமைப்பு, யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை திறப்பு, போர்நிறுத்தம் என்பன குறித்தே பேசப்படும் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

அடுத்த வாரத்தின் ஆரம்ப பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கதரப்பு பிரதிநிதிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்களில் தமிழ் மக்களின் அன்றாட அத்தியாவசியமான பிரச்சினைகள் பற்றி ஆராயப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருப்பது தெரிந்ததே.

இதனடிப்படையில் - இடம் பெறவுள்ள பேச்சுக்களில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உடனடியாக செயற்படுத்தப்பட வேண்டிய புனரமைப்பு நடவடிக்கைகள் பற்றியும்,

யாழ் குடாநாட்டு மக்கள் பிரயாணம் செய்யக் கூடிய வகையில் வடக்கிற்கான தரைவழிப் போக்குவரத்து பாதையைத் திறப்பது பற்றியும் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்குமிடையில் ஏற்படுத்தப்படவுள்ள யுத்த நிறுத்தமும் அதில் இருதரப்பினரும் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள் பற்றியும் ஆராயப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

## படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## உருவப்படம் உள்ளே

பூமாஞ்சோலை இராணுவ முகாம் அழிப்பில் வீரச்சாவடைந்த லெப். கேணல் லக்ஸ்மணனின் உருவப்படம் உள்ளே.

## யாழ். செல்லும் அரசதரப்பு குழுவை விரைவில் சந்திரிகா சந்திப்பார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்ட கருத்துவேற்றுமைகளை தீர்ப்பது பற்றி ஆராய்வதற்காக பேச்சுக்களில் கலந்து கொள்ளும் அரசாங்க தரப்பு பிரதிநிதிகளின் சந்திப்பு ஒன்றுக்கு ஜனாதிபதி

ளர் ஒருவரை மேற்கோள் காட்டி ''லங்காதீப'' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களால் எழுந்துள்ள கருத்து வேறுபாடுகள் இச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படும் என

கொள்ளும் அரசாங்க தரப்பு பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் இடையிலான சந்திப்பு நாளை ஞாயிறு மாலைக்குப் பின்னரே நடைபெறும் என அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மாலைதீவுகளிலிருந்து

## மூதூரில்இருபொலிசார்பலி; மூவரைக் . காணவில்லை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் மூதூர் பகுதியில் விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து நடாத்திய தாக்குதலில்பொலி

போயுள்ளனர். சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் இதனைத் தெரிவித்துள்ளன.

கடந்த செவ்வாயன்றுஇரவு நடந்த இச் சம்பவத்தில்



லெப். கேணல் லக்ஸ்மணன்

ந்து கொள்ளும் அரசாங்க தரப்பு பிரதிநிதிகளின் சந்திப்பு ஒன்றுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இத் தகவலை அரசாங்கத் தரப்பின் சிரேஷ்ட பேச்சா

களால் எழுந்துள்ள கருத்து வேறுபாடுகள் இச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படும் எனவும் லங்காதீப தெரிவித்துள்ளது.

புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில் கலந்து

லிருந்து தெரிய வருகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மாலைதீவுகளிலிருந்து திரும்பியதும் இச்சந்திப்பு நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுளது.

லைப் புலிகள் பதுங்கியிருந்து நடாத்திய தாக்குதலில்பொலிசார் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் மூன்று பொலிசார் காணாமற்

இதனைத் தெரிவித்துள்ளன.

கடந்த செவ்வயன்றுஇரவு நடந்த இச் சம்பவத்தில் ரோந்து சென்ற பொலிசாரின் அணிமீது தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

# பூமாஞ்சோலைபடைமுகாம் புலிகளால் முற்றாக அழிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கரடியனாறுக்கும் செங்கலடிக்கும் இடைப்பட்ட பூமாஞ்சோலை என்னுமிடத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம் மீது கடந்த புதனன்று இரவு 11.55 மணியளவில் தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் அம்முகாமை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து முகாமில் அமைந்திருந்த காவலரண்களையும், விடுதிகளையும் அழித்தனர்.

தாக்குதல் ஆரம்பித்த இருபது நிமிடத்தில் இராணுவ முகாம் முழுமையாக புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தது. ஒன்றரை மணித்தியாலங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் முகாம் இருந்தபின் இராணுவ காவலரண்களையும், விடுதிகளையும் தீயிட்டு அழித்து புலிகள் வெளியேறிச் சென்றனர்.

இத் தாக்குதலில் இராணுவத்தினர் முகாமிலிருந்துதப்பியோடியதால் இராணுவத்தினர் தரப்பில்- ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் 18 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இராணுவத்தினரின் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

தாக்குதல் நடைபெற்ற வேளை செங்கலடிஇராணுவ முகாமிலிருந்தும் கரடியனாறு இராணுவ முகாமிலிருந்தும் முன்னேறி வந்த இராணுவ

[8ஆம் பக்கம் பார்க்க]

# லெப். கேணல் லக்ஸ்மணன் உட்பட 18 போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் பூமாஞ்சோலை இராணுவ முகாம் மீது கடந்த 28-ம் திகதி விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 18 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

★ மட்டு-அம்பாறை மாவட்ட துணைத் தளபதி லெப். கேணல் லக்ஸ்மணன் /வொம்பர் வேலுப்பிள்ளை ஜெயக்குமார், மட்டக்களப்பு.

★ மேஜர் சத்தியா அர்சுணப்பிள்ளை மோகன்பிள்ளை, பதுளை

★ மேஜர் துவாரங்கன் சிவநாதன் முத்துலிங்கம், மட்டக்களப்பு

★ மேஜர் நிதர்சராஜா/ நிதேன் மயில்வாகனம் ஏகம்பமூர்த்தி, மட்டக்களப்பு.

★ கப்டன் வித்துவான் இரத்தினசிங்கம் மோகனரெத்தினம், மட்டக்களப்பு.

★ கப்டன் இதயராஜன் இராமக்குட்டி பேரின்பராசா, மட்டக்களப்பு.

★ லெப்டினன்ட் ஆழிக்குமரன் முருகன் மோகனதாசன், மட்டக்களப்பு.

★ லெப்டினன்ட் அருணகிரிநாதன் வில்லியம் பங்குநசன், அம்பாறை.

[8ஆம் பக்கம் பார்க்க]

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பூமாஞ்சோலையில் புதனன்று நள்ளிரவு இராணுவ முகாமில் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினரிடமிருந்து ஆயுதங்கள் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

- ஏ. கே. எல்எம்ஜி - 01
- 2 அங்குல மோட்டார்-01
- ரி.56 பட்மொடல் - 01
- ஐ. எம் ரவை - 5000
- ஜே.ஆர்.கைக்குண்டு-100

ஆகிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

## வீரச்சாவு



கப்டன் ஜீவன்

மணலாறு பிரதேசத்தில் கடந்த 27-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் விடுதலைப்புலிகள் போராளி ஒரு

[8ஆம் பக்கம் பார்க்க]

# நட்சத்திர ஹோட்டல்களுக்கும் வேலை நிறுத்தம் பரவியது

(கொழும்பு)

இலங்கை சுற்றுலா பயணத்துறையிலும் ஊழியர்களின் வேலைநிறுத்தம் ஆரம்பித்துள்ளது. கொழும்பின பிரபல ஹோட்டலான ரெனாய்சன்ஸ் ஹோட்டலின் ஊழியர்கள் நேற்றுமுதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கின்றனர். இவ் வேலை நிறுத்தத்திற்கு விசேட கொடுப்பனவு கோரிக்கையில் எழுந்த தகராறே காரணம் எனக் கூறப்படுகிறது

[8ஆம் பக்கம் பார்க்க]

# யாழ். மருத்துவ பீடத்திற்கு அரசு மருந்துப்பொருள் வழங்க பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)

போதியளவு மருந்துப் பொருட்களை யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்திற்கு கொண்டு வருவதற்கு அனுமதி வழங்க சிறிலங்கா அரசு பின்னடிக்கின்றது. இதனால் யாழ் பல்கலைக் கழகத்தல் மருந்து பற்றாக்குறை ஏற்பட்டுளதுஎன பல்கலைக் கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு தேவையான மருந்துப் பொருட்கள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இம் மருந்துப் பொருட்களை போதியளவு எடுத்து வருவதற்கு சிறிலங்கா அரசின் பாதுகாப்பு தலைமை அலுவலக அதிகாரிகளிடம் அனுமதி பெறப்பட வேண்டும்

இவற்றிற்கு அனுமதி வழங்

[8ஆம் பக்கம் பார்க்க]

# பாப்பரசருக்கு பவனிவண்டி வழங்க சிறிலங்கா மறுப்பு

(யாழ்ப்பாணம்)

பரிசுத்த பாப்பரசர் பவனி வருவதற்கான வாகனத்தை தாம் தயாரித்து தருவதாக கூறிய சிறிலங்கா அரசு தற்பொழுது அதை மறுத்துள்ளது.

இதனால் பவனி வருவதற்கான வாகனமும் பரிசுத்த பாப்பரசருடன் கூடவே விமானம் மூலம் கொண்டுவரப்படவுள்ளதாக யாழ் ஆயர் தெரிவிக்கின்றார்.

வரும் தை மாதம் 20 ஆம் திகதி பாப்பரசர் இலங்கைக்கு வர இருக்கின்றார். இவர் பவனியின் போது பயன்படுத்

[8ஆம் பக்கம் பார்க்க]

# பூமாஞ்சோலை முகாமிலிருந்த இரு அதிகாரிகளை காணவில்லை

(கொழும்பு

புதனன்று மட்டக்களப்பு பூமாஞ்சோலையிலுள்ள இராணுவ முகாமை புலிகள் தாக்கிய சம்பவத்தில் இரண்டு லெப்டினன்ட் தரத்திலுள்ள இராணுவ அதிகாரிகள் காணாமல் போய்விட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதலில் எட்டு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர் எனவும் படுகாயமடைந்தவர்களில் கோப்ரல் தரத்திலுள்ள இராணுவ அதிகாரிகளும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 45 நிமிடங்கள் விடுதலைப்புலிகள் இத்தாக்குதலை நடத்தியதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## வரிவிளம்பரம்

### கண்டெடுக்கப் பட்டுள்ளது

25 - 12 - 94 இரவு தட்டா தெரு சந்திக்கும் பிறவுண் றோட் சந்திக்கும் இடையில் ஆண்களுக்கான ROMANO கைக்கடிகாரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகளுடன் பெற்றுக் கொள்ளவும். முகவரி, ம. ஜெயதாஸ் கே. கே. எஸ். வீதி, 3 - ம் கட்டை, தாவடி கொக்குவில். (பனைப் பொருளகத்திற்கு அருகாமையில்) (10542)

### ஒப்படைக்கவும்

மிருசுவில் உசன் சி. அன்புக்கரசிஆகியஎனதுதங்க கைச் சங்கிலி ஒன்று 29 - 12 - 94-ல் சாவகச்சேரி மருத்துவமனைக்கும் - ஜெயா ஸ்ருடியோவுக்குமிடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மனம் இரங்கி சாவகச்சேரி கண்டிவீதியிலுள்ள நிருத் படமாடத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (10547)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 698 / 15 தலையாழி, வைரவர் கோயிலுக்கண்மையில், யாழ். (10544)

### விற்பனைக்குண்டு

கொடிகாமம் கச்சாய் வீதி கிராமசபை அலுவலகத்திற்கு முன்பாக ஏழு பரப்புத் தென்னங் காணியும் தண்ணீர் வசதியுடன் வீடும் விற்பனைக்குண்டு - தொடர்பு அருணன் கமலாதேவி கச்சாய் வீதி கொடிகாமம் (10546)

### நாள் குறிப்பேடு

புதுவருட நாள் குறிப்பேடு (டயறி) மலிவு விலையில் விற்பனைக்குண்டு. ரூபா 65/- ஆனந்தா அச்சகம் காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம். (10548)

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### 2-ம் லெப். அருளப்பன்

(நகுலேசபிள்ளை ஜெயக்குமார்)

சரவணை

பிறப்பு: 05- 12- 1975

வீரச்சாவு: 17- 11- 1994

கள்ளம் அறியா கபடும் அறியா
வெள்ளை மனத்தோன் அருளப்பன்
உள்ளம் மலர உறவும் தழுவ - உயிர்
நாதமாய் உலவிய வேங்கை
துளும் மனதில் தோன்றும் கனவில்
அல்லும் வேளையும் அருந்தும் போதிலும்
அங்கும் இங்கும் நிழலாய் இருப்பவன் அருளப்பன்.

இன்று (31- 12- 94) எமதில்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்

1-ம் ஒழுங்கை,
மூத்தவிநாயகர் வீதி,
கச்சேரி-நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(10550)

## நினைவு கூருகின்றோம்...

**31.12.1994**

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் சாம்பல்தீவுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

**மதி சக்கினா** (தாமோதரம் இராஜேந்திரன் திருமலை)

குறிஞ்சாத்தீவுப் பகுதியில் இந்தியப்படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். விசு** (இராசகோபால் ராஜ்குமார் - ஜெயந்திபுரம் - மட்டு)

காத்தான்குடியில் சிறிலங்கா ஊர்காவற்படையினருடனான சமரின்போது இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**தனபால்** (தம்பிராசா கணேசலிங்கம்-வெல்லாவெளி மட்டு)

தவறுதலான வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

**மகேந்திரன்** (அலோசியஸ் மகேந்திரன் - வந்தாறுமூலை மட்டு)

1988ஆம் ஆண்டு சுன்னாகத்தில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளின் முகாம் மீதான தாக்குதலில் விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**கப்டன் லோலோ** (தம்பிராசா சுரேஸ்குமார் -புன்னாலைக்கட்டுவன் வடக்கு யாழ்)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளினால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டு எமைப்பிரிந்த,

**வெளிச்சம்-மோகன்** (ஆறுமுகம் விக்னேஸ்வரன் வண்ணார்பண்ணை - யாழ்)

கொடிகாமம் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ரேகா** (அகஸ்ரின் பிலிப்கொன்சன்ரைன் - சாவகச்சேரி -யாழ்)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**இராசதுரை முருகையா** (அரியாலை -நல்லூர்)

1990-ம் ஆண்டு கிளாலிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் விமானத்திலிருந்து மேற்கொண்ட குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய,

**நந்தினி** (தேவிகா சின்னத்தம்பி - 5-ம் வாய்க்கால் கிளிநொச்சி)

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண்ணடைந்து தமிழகத்தில் சிகிச்சை பெறுகையில் வீரச்சாவெய்திய,

**கப்டன் றோய்** (சிற்றம்பலம் மகேந்திரராசா - காங்கேசன்துறை - மயிலிட்டி)

1991-ம் ஆண்டு திருமலை-சல்விமுந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் விழுப்புண்ணடைந்து சிகிச்சைக்காக வரும் வழியில் வீரச்சாவெய்திய.

**2-ம் லெப்.மதிச்செல்வன்-றீகன்** (இரத்தினம் மோகன் - மூதூர் திருமலை)

திருமலை - குரங்கல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சின்னவன் -இடைக்காடன்** (மூர்த்தி சிவரத்தினம் - ஆலங்கேணி, கிண்ணியா - திருமலை)

1993-ம் ஆண்டு திருமலை-புல்லுமோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மேஜர் அருள்-ஜெயம்** (பரசுராமன் சோமசீலன்- குச்சவெளி, மூதூர்-திருமலை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

([சி-11051)

## அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கம் வரைவுள்ளது
தபாற்கந்தோரடி, வட்டுக்கோட்டை

### அறிவித்தல்

மேற்படி நிறுவனத்தின் 9301-9400 வரையுள்ள இலக்கங்களைக் கொண்டதும் 9301-9350வரை பாவிக்கப்பட்ட நிலையிலுள்ளதுமான 94-ம் இலக்க தற்காலிக பற்றுச்சீட்டுப் புத்தகம் ஒன்று சங்கரத்தை பத்திரகாளி அம்மன் கோயிலுக்கும் நவாலி சேச்சுக்கும் இடையில் தவறிவிட்டது. இதனை கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி நிறுவனத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குறித்த இலக்கம் 9351-9400 வரையான பற்றுச்சீட்டுக்களின் பெயரால் பெறப்படும் பணங்களுக்கு இந்நிறுவனம் பொறுப்பேற்க மாட்டாது என்பதை அங்கத்தவர்களுக்கு அறிவிக்கின்றோம்.

செ. இ. ஆனந்தராஜா
பொது முகாமையாளர்

(சி-11053)

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:

16 - 05 - 1966

வித்தாக:

31 - 12 - 1990



சீராக வாழ்ந்த மகன்
செல்வத்தில் திளைத்த மகன்
தமிழ் காக்கும் கடமையில்
தம்பியின் பாசறையில்
தானாக இணைந்த மகன்

உன் நாளம் நரம்பெல்லாம்
தமிழுக்காய் துடிதுடிக்கும்

நாரதர் கூட்டங்கள்
நடுங்கிடும் பைரவி - நீ
அந்நியன் படைகளின்
அடிப்புலம் அறுத்தவன் - நீ.

# கப்டன் றோய்

## (சிற்றம்பலம் மகேந்திரராசா)

மயிலிட்டி

"றோய்" இவன் நினைவுநாள் டிசம்பர் 31இல் இனிய இவன் நினைவுகளை பேசி பகிர்வதற்கும் எம்முடன் இணைந்து உணவு உண்ணுதற்கும் உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்பாய் அழைக்கின்றோம்.

போராளர்,
நெல்லியடி.

(10540)

- குடும்பத்தினர்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# சிறிலங்கா அரசுடனே பேச்சு தலையிட ஐ. தே. க விரும்பவில்லை

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தை பொது ஜன ஐக்கிய முன்னணியுடனோ ஐக்கிய தேசிய சட்சியுடனோ நடைபெறவில்லை. அது சிறிலங்கா அரசாங்கத்துடனேயே நடைபெறுகிறது. எனவே பேச்சுவார்த்தையில் தீக்குளிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு எவ்வித அவசியமும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளருடனான சந்திப்பின் போது பத்திரிகையாளர் ஒருவர் விடுதலைப் புலிகளுடன் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிய ஐ.தே.கவின் கருத்து என்ன எனக் கேட்டபோதே ரணில் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும் அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கும் ஆணையின் படி அவர்கள் அவ்வாறு செயற்படுவதற்கு இடமளிக்கப்படல் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# பொலிசாரை தாக்கினராம் மூன்று பெண்கள் கைது

(கொழும்பு)

ஜாஎல எக்கலவில் பொலிரைக்ஸ் நிறுவனத்தை சேர்ந்த மூன்று பெண் ஊழியர்கள் பொலிசாரைத் தாக்கிய குற்றத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்களை பொலிசார் தடுத்தபோது இப்பெண் ஊழியர்களும் வேறு ஊழியர்களுமாக சேர்ந்து சப் இன்ஸ்பெக்டர் ஒருவரை ரேசர் பிளேட்டினால் தாக்கியதாகவும் குற்றம் சாட்டப் ட்டுள்ளது.

# கொள்ளைக்கூட்ட தலைவர்; சர்வதேச பொலிஸ் தேடுதல்

(கொழும்பு)

'வேடெக்ஸ்' நிறுவனத்தின் சம்பள பணக்கொள்ளையில் ஈடுபட்ட கும்பலின் தலைவர் ஜப்பான்,பிரெஞ்சு, ஜேர்மன் உட்பட ஏழு மொழிகளை பேசக்கூடியவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 வயதான எட்வர்ட் ரணவீர என்னும் இந்நபர் 11 வருடங்களாக ஜப்பானில் கராத்தே கலையை நன்கு பயின்றவர் என்றும் - அமெரிக்காவில் மூன்று மாதகாலம் விமானம் ஓட்டும் பயிற்சியை பெற்றவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் உட்பட ஏனைய நாடுகளில் மோசடிகளை செய்தமையால் இவர் சர்வதேச பொலிசாரால் தேடப்பட்டு வந்ததாகவும், வெளிநாடுகளுக்கு பௌத்த பிக்கு என்ற போர்வையில் இவர் சென்று வந்ததாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# கிராம சேவகர்களுக்கு தகவல் பலகைகள்

(கொழும்புத்துறை

யாழ்ப்பாணப் பிரதேசச் செயலகம், தனது பிரிவுக்கு உட்பட்ட கிராம உத்தியோகத்தர்களின் பாவனைக்காகப் பெயர்ப்பலகை ஒன்றையும், பொதுமக்கள் பார்வைக்குரிய தகவல் பலகை ஒன்றையும் இலவசமா விநியோகித்து வருகிறது.

கிராம உத்தியோகத்தர்கள் தமது பிரிவுக் காரியாலயங்களிலிருந்து வெளியே செல்லும் போது, பொதுமக்களின் கவனத்துக்காக அவர் தமது காரியாலயத்திலிருந்து வெளியில் புறப்படும் நேரம், சென்றிருக்கும் இடம், காரியாலயத்துக்குத் திரும்பிவரும் நேரம் ஆகியன அந்தத் தகவல் பலகையில் குறிப்பிடப்படும். (24)

# 3ஆம் திகதி ஆளுநர் பதவி ஏற்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் புதிய ஆளுநர் திரு. காமினி பொன்சேகா எதிர் வரும் 3ஆம் திகதி முதல் புதிய பொறுப்பை ஏற்கவிருக்கின்றார்.

இதன் பொருட்டு எதிர் வரும் செவ்வாய்க்கிழமை திருகோணமலை வரவிருக்கின்றார்.

# லஞ்சக் குற்றவாளிகள் கட்சியிலிருந்து நீக்கப்படுவர்

-எதிர்கட்சித்தலைவர் ரணில்

(கொழும்பு)

லஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் கீழ் சட்டப்படி குற்றவாளிகளாகக் காணப்படுபவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து வெளியேற்றப் படுவார்கள் எனகட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமானரணில்விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மேலும் லஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவை நியமிப்பதற்கான சட்டத்தை நிறைவேற்றுவதற்குத்தேவையான மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு ஐ. தே. கவும் அரசுடன் சேர்ந்து வாக்களித்ததாக அவர் கொழும்பில் தெரிவித்துள்ளார். கட்சி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிப்பதற்காக பத்திரிகையாளர்மகாநாடு கூட்டப்பட்டிருந்தது அதில் ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கையில் தற்போது நடைபெற்றுவரும் வேலை நிறுத்தங்களின் பின்னணியில் தமது கட்சி இருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டை தான் நிராகரிப்பதாக குறிப்பிட்டார். ஐ தே கவில் இருந்த அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஆணைக்குழு முன் ஆஜர்செய்வதற்த எத்தகைய தடைகளும் இல்லை எனவே சட்டப்படி குற்றவாளிகளாகக்காணப்படுவோர் மீது மட்டும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படல் வேண்டும் என ரணில் விக்கிரயசிங்க கூறினார்.

# அகராதிகள் வெளியிடாமையும் இனப்பிரச்சினைக்கு காரணம்

## தமிழ்- சிங்கள அகராதி தொகுப்பாசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

தமிழ் - சிங்கள அகராதி ஒன்று கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது இதன் வெளியீட்டுவிழா பிரதமர் சிறிமாவோபண்டாரநாயகா தலைமையில் கொழும்பு பண்டாரநாயகா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சுமார் 20 ஆயிரம் சொற்களை உள்ளடக்கியு ள இவ் அகராதியில் ஒவ்வொரு தமிழ்ச் சொல்லின் உச்சரிப்பும், கருத்தும் சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ளது.

சிறிலங்கா மக்களின் தனித்துவத்தைப் பேணும் வகையில் சகலரும் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளையும் கற்பது அவசியம் என அகராதியின் பிரதான தொகுப்பாசிரியர் பீரிஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

மொழியைக் கற்பதற்கு தேவையான அகராதிகள் முதலியன வெளியிடப்படாமையும் இனப்பிரச்சினைக்கான ஒரு காரணம் என அவர் கூறியுள்ளார்.

பாடவிதான அபிவிருத்தி நிலையத்தினூடாகவும் மக்கள் தொடர்பு சாதனங்கள் வழியாகவும் மொழியைக் கற்பித்துத திரட்டிக்கொண்ட அனுபவம் நூலாசிரியருக்கு இந்த அகராதியை தொகுக்க பெரிதும் உதவியதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நூல் 10வருட முயற்சியில் உருவாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அடித்து காயப்படுத்தியவர் அபராதம் செலுத்தினார்.

(வடமராட்சி)

வல்வெட்டிதுறையை சேர்ந்த ஒருவருக்கு அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவர் அடித்துக் காயப்படுத்தியதாகவல்வெட்டிதுறை காவல்துறையினர் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

பருத்தித்துறை தமிழீழ நீதிமன்ற நீதியாளர் பரதீபா இவ்வழக்கை விசாரணை செய்த பின்னர், குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு தீர்ப்பு வழங்கினார். (யோ)

# இலவச மூக்குக் கண்ணாடி

யாழ்லயன்ஸ்கழகம் கடந்த 27 ம் திகதியன்று அரியாலை மேற்கிலுள்ள காந்தி சனசமூக நிலையத்தில் வைத்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 25 குடும்பங்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கியது.

இந்நிகழ்ச்சியில் டாக்டர் கே. சிவபாலன், டாக்டர் எஸ் பி ஆர் சீர் மாறன் சிறுவருக்கும் நாற்பது வயதிற்கு மேற்பட்டோருக்கு ஏற்படக் கூடிய நோய்கள், அவற்றைத் தடுக்கும் வழிமுறைகள் பற்றி உரையாற்றினர்.

அரியாலை மேற்கு மாதர் சங்கம் இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தது (24)

# மீள் பரீட்சை

(திருநெல்வேலி)

1994 - ம் ஆண்டு நூலகவியல் தகவல் விஞ்ஞானம் முதல் நிலைப்பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்தாத மாணவர்களுக்கான மீள் பரீட்சை 1995 மே மாதம் நடைபெறும் என சிறிலங்கா நூலகச் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார். (27)

# அதிபர் கூட்டம்

நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் வியாழன் பிற்பகல் 3 மணிக்கு யாழ் கோட்டக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும்-

கடந்த 20 ஆண்டுகளாக யாழ்நகரில் வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் ஒரே நிறுவனம் யாழ் நகரில்

பட்டப் படிப்புகள் கல்லூரி

புதிய கல்வியாண்டு 1995 \96

யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகங்களின் வெளி நிலைப் பட்டப் பாட நெறிகளான

கலை முதற் தேர்வு - G.A.Q
கலைமாணி பகுதி i - B. A. Part i
கலைமாணி பகுதி ii - B. A. Part ii
வணிக முதற் தேர்வு - First - in Commerce
வணிக மாணி பகுதி i- B. Com Part i
வணிக மாணி பகுதி ii - B. Com Part ii
வணிக மாணி பகுதி iii - B Com Part iii
விஞ்ஞான முதற் தேர்வு - G. S. Q
(புள்ளி விபரவியல்)
விஞ்ஞான மாணி - B. Sc

க. பொ. த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் 7-1-1995-ல் ஆரம்பமாகின்றன

உதவிப் பதிவாளர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி,
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-11040)

# 6-ம் ஆண்டில் ஈழநாதம் போட்டிகளும் விதிமுறைகளும்

# புதிய பணிப்பாளர் ஜனவரியில் பதவி ஏற்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான புதிய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வரும் புதுவருட தினத்தன்றோ அன்றி அடுத்த நாளோ வரும் முதலாம் அல்லது இரண்டாம் தேதிகளில் நடக்குமெனவும் சுகாதார சேவைகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் - இலங்கை
பல்கலைக்கழக வருமதி

## விதிமுறைகளும்

ஈழநாதம் மக்கள் தினசரி ஆறாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதைமுன்னிட்டு சிறுகதைப்போட்டி, கவிதைப் போட்டி என்பவற்றை நடாத்தவுள்ளது இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளை பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

### ★ சிறுகதை ★ கவிதை போட்டிகளில் கலந்து கொள்வோர் கடைப்பிடிக்க வேண்டியவை

- படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளையோ சமூகப் பிரச்சினைகளையோ சித்திரிக்கும் வண்ணம் அமையலாம்.
- படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதைஉறுதிப் படுத்த வேண்டும்.

போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் ஜனவரி 31- ம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

போட்டி முடிவுகள் யாவும் 17 02. 1995 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் ஆறாம் ஆண்டின் ஆரம்ப விழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானவை எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்கள் ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு ஆறாம் ஆண்டின் ஆரம்ப நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம் ஆறாம் ஆண்டுப் போட்டி' என கடித உறையில் இடது பக்கமேல் மூலையில் குறிப்பிடப்பட்டு,

**ஆசிரியர்,**
**ஈழநாதம்**
**31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்**
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

வரும் புதுவருட தினத்தன்றோ அன்றி அடுத்த நாளோ தமது பதவியை பொறுப்பேற்பார் என தெரியவந்துள்ளது.

மேற்படி நியமனம் பற்றிய மாகாணசபையின் நியமனக் கடிதம் யழ். அரச அதிபரினால் எடுத்துவரப்பட உள்ளதாகவும், அவர் நியமனக் கடிதம் கொண்டுவந்தவுடன் புதிய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தமது பொறுப்பில் பணியை ஆரம்பிப்பார் எனவும் இது கின்றன.

மேற்படி புதிய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு டாக்டர் சிறீகாந்தாவின் பெயர் ஜனாதிபதியினால் தெரிவு செய்யப்பட்டது என்பதும் அவருக்கான நியமனக் கடிதம் வடக்கு, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சிலிருந்து வந்ததும் அவர் தமது பதவியை பொறுப்பேற்பார் என்றும் ஏற்கனவே செய்தி வெளிவந்தது தெரிந்ததே.

(சி)

**காலிமுகத்திடலில் பாப்பரசரின்**

## கூட்டுத்திருப்பலியில் 100 பேர் பங்குபற்றுவர்

(யாழ்ப்பாணம்)

பரிசுத்த பாப்பரசர் காலிமுகத்திடலில் நடாத்த உள்ள கூட்டுத்திருப்பலியில் ஆயர்கள், குருக்கள் உட்பட நூறு பேர் இணைந்து நடாத்தவுள்ளனர்.

இவர்களின் மேடையின் முன் ஏற்பாட்டிற்கு யாழ்ப்பாண குருமடத்தில் இருந்து இரு உதவியளரை அனுப்பி வைக்குமாறு கொழும்பில் இருந்து யாழ் ஆயரிற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் முன் ஏற்பாட்டிற்கான திகதி முடிவடைந்த பின்பே வந்து சேர்ந்துள்ளதாகள தெரிய வருகிறது. (இ,நி,பா)

## எஞ்சிய சீருடைத் துணிகள் கப்பலில் அனுப்பப்பட்டது

(வடமராட்சி)

யாழ்,மாவட்டபாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு மிகுதியான சீருடைத் துணிகள் கொழும்புக்கு நேற்று முன்தினம் அனுப்பிடன.

1994ஆம் ஆண்டுக்கான மாணவர்களின்சீருடைத்துணிகள்யாழ். கல்வித்திணைக்களத்திற்குஎடுத்து வரப்பட்டுவழங்கப்பட்ட பின்னர்மிகுதியாக இருந்த சீருடைத் துணிகள் யாழ். கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டன.

இச்சீருடைகள் பருத்தித்துறை துறை முகத்தில் இருந்து கொழும்புக்குப் புறப்பட்ட 'ஹபரண' கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. (யோ)

## திருத்தம்

நேற்றைய வெள்ளிமஞ்சரியில் வெளியான பாலகுமாரனின் அல்ஜீரிய விமான கடத்தலும் அரபுலக-மேற்குலக பண்பாட்டு மோதலும்என்ற கட்டுரையில் அல்ஜீரிய ஜனாதிபதியின் பெயர் லிமின் செறபால் என்றதற்கு பதிலாக லிமின் செருவால் என திருத்தி வாசிக்கவும் அரசறிவியல் ஆய்வாளர் **Giles KeePed** என்பதை **Gilles Kepel** என திருத்தி வாசிக்கவும்.

**பல்கலைக்கழக அனுமதி 1993,94**

## மேலதிக அனுமதியும், வெற்றிடங்களை நிரப்புதலும்

முன்னைய பத்திரிகை விளம்பரம் தொடர்பாக 1993/94 கல்வியாண்டிற்கு வெற்றிடங்களை நிரப்புவதற்காக (1992 A/L ஓகஸ்ட் பரீட்சை) ஆரம்பத்தில் கிடைத்த பெயர்ப் பட்டியலைவிட மேலதிக பெயர்ப் பட்டியல் ஒன்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டு விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது.

மேற்படி கற்கை நெறிகளுக்கான அனுமதிக் கடிதம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து கிடைக்கப் பெற்ற மருத்துவ மாணவர்கள் உடனடியாகப் பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள் கலை, வர்த்தக, முகாமைத்துவ. விஞ்ஞான, விவசாய கற்கை நெறி மாணவர்கள் தமது பதிவை மேற்கொள்வதற்கு வசதியாக, பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 31-12-1994 இலிருந்து 31-01-1995 வரைக்கும் நீடிக்கப்பட்டு உள்ளது இத் திகதிக்குப் பின்னர் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது பதிவு செய்யாத மாணவர்களின்இடங்கள் வெற்றிடங்களாகக் கருதப்பட்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்குப் பெயர்ப்பட்டியல் அனுப்பப்படும்.

1994-12-29

**பதிவாளர்**
(சி-11052)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விணணப்பங்கள் 1995 - 01 - 23 ஆம் திகதிவரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**பயிராக்கவியல் / மிருக விஞ்ஞான / விவசாயப் பொருளியல் / விவசாய பொறியியல் / விவசாய இரசாயனவியல் / விவசாய உயிரியல் / தற்காலிக உதவி விரிவுரையாளர் / தற்காலிகச் செயன் முறைக் காட்டுநர்.**

சம்பள அளவுத்திட்டம்:

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்: ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு
2. தற்காலிக செயன்முறைக் காட்டுநர்: ரூபா 4,420/- (நிலையானது) மாதமொன்றுக்கு

ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கியின் சிறப்பங்காடிக்கிளை அல்லது பல்கலைக்கழக சிறாப்பரின் முகப்பு மேசையில் 20/- ரூபாவைச் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் படிவங்களையும் இதர விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் 23 X 10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள்தமது நிறுவனங்களின்தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

மு. கு. மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும்கொழும்பு 13,. ஆட்டுப்பட்டித் தெரு 154 இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994. 12. 28

(சி 11042)


மீள் பார்

# கருடம்புலிகளின் சாதனைகள் நிறைந்த ஆண்டு

## தமிழீழம்

### ஜனவரி

04: பருத்தித்துறை சக்கோட்டை கடற்பரப்பில் கடற்படைத் தாக்குதலுக்கு ஒன்பது மீனவர் பலி; சாவகச்சேரி உலங்கு வானூர்தி தாக்குதலில் மூவர் காயம்.



தேசியத் தலைவர் பிரபாகரனுடன்
முதற்பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி


05: தாவடி, சாவகச்சேரியில் விமானக் குண்டு வீச்சு. குழந்தை உட்பட ஆறு பேர் பலி. ஐவர் காயம்
09: மாங்குளம் தமிழீழ காவல் துறைப் பணிமனை திறப்பு.
10: பூநகரி முகாம் தாக்குதலில் காயமுற்று விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வந்த சிங்கள இராணுவச் சிப்பாய் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் பணிப்பின் பேரில் விடுவிப்பு; ஆறாவது தமிழீழ நீதிமன்றம் முல்லைத்தீவில் திறப்பு.
11: முல்லைத்தீவ மாவட்டம் நெடுங்சேணியில்

18: முல்லைத்தீவு மாவட்டம் பூனைத்தொடுவாய் கடற்பரப்பில் மீனவர் மீது கடற்படை தாக்குதல், 10 மீனவர் பலி.

21: முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணிப் பிரதேசத்தில் இராணுவ காவலரண் மீது புலிகள் தாக்கு சிப்பாய் பலி, ஆயுதங்கள் மீட்பு.

22: ஆசியன் நகரின் மேயர் சின்னமணி சுப்பிரமணியம் யாழ். வருகை.
23: மணலாற்றில் புலிகள் அதிரடி. 'பவல்' கவச வாகனம் கைப்பற்றி அழிப்பு. ஆறு இராணுவத்தினர் பலி. விசேட துணைப்படை பங்கேற்பு இரண்டு போராளிகள் வீரச்சாவு
24: சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கும் நல்லெண்ண முயற்சியாக சிங்களப் போர்க் கைதிகள் இருவர் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரனால் விடுவிப்பு
26: அல்லிப்பளை, ஆலங்கேணிப் பகுதியில் விமா

எறிகணை வீச்சு. நால்வர் பலி. மூவர் படுகாயம்.
17: பூநகரியில் மூன்று நிமிடத் தாக்குதலில் மூன்று படையினர் பலி. ஆயுதங்கள் மீட்பு.
19: தமிழீழமேல்முறையீட்டு நீதிமன்று திறப்பு.
21: ஆனையிறவு தட்டுவன் கொட்டியில் புலிகள் அதிரடி. 11 காவலரண்கள் அழிப்பு. மூன்று சிப்பாய்கள்



தாக்குதல். ஒருவர் பலி.
18: மன்னார் பெரிய பண்டிவிரிச்சானில் விமானக் குண்டு வீச்சு. ஒருவர் பலி. இருவர் காயம்.
19: மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிசார் மீது தாக்குதல். ஒரு பொலிசார் பலி. ஆயுதங்கள் மீட்பு.
20: நெடுங்கேணி பிரதேசத்தில் இராணுவத்தின் மீது தாக்குதல். இரண்டு இராணுவத்தினர் பலி. ஆயுதங்கள் மீட்பு; சுழிபுரம் மக்கள் குடியிருப்பு மீது எறிகணை வீச்சு. பெண்புலி சிறுமி காயம்.
22: பண்ணைக் கடலில் மீனவர் மீது இராணுவம் சூடு. ஒருவர் பலி.
25: வவுனியா மாவட்டம் செட்டிக்குளம் பகுதியில் "ஒப்பரேசன் ஜயமக" ஆரம்பம.

### மே

01: தோம்பூர் பாலியாலிஸ் காவலரண் மீது புலிகள் திடீர் தாக்குதல் இரு பொலிசார் பலி. ஆயுதங்கள் மீட்பு.
05: மண்டூரில் பொலிசார் மீது தாக்குதல். இருவர் பலி. ஆயுதங்கள் மீட்பு.
06: வேளாண் மன்னர்கள் ஆறுபேருக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தங்கப் பதக்கம். சான்றிதழ் வழங்கி கௌரவிப்பு.

24: திருமலையில் இராணுவம் மீது புலிகள் தாக்குதல் ஆயுதம் மீட்பு.
26: திருகோணமலை மாவட்டம் புல்மோட்டையில் புலிகள் அதிரடி. 5 இராணுவத்தினர் பலி.

### ஜுன்

04: திருகோணமலை மாவட்டம் மாதுறுவெவ இராணுவ காவலரண் மீது தாக்குதல். சிப்பாய் பலி. வெடிப்பொருட்கள் மீட்பு. இரு போராளிகள் வீரச்சாவு.

06; காரைநகர் கடற்படைத் தளத்தினுள் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி பவுசர் சிதறியது ஒரு சிப்பாய் பலி. மற்றொருவர் காயம்; சங்கானைப்பகுதியில் அகதி முகாம் மீது எறிகணை வீச்சு. ஒருவர் பலி. ஐவர் காயம்.

09: மட்டக்களப்பு மாவட்டம் வெலிக்கந்தயில் பொலிசார் மீது தாக்குதல் நான்கு பொலிசார்பலி. ஆயுதங்கள் மீட்பு; திருகோணமலை மாவட்டம் சம்பூரில் இராணுவ முகாம் மீது தாக்குதல் நான்கு இராணுவத்தினர் பலி; ஆயுதங்கள் மீட்பு-
11; பேராசிரியர் அ. துரைராசா காலமானார்- மூன்று நாள் துக்கதினம்விடுதலைப் புலிகள் பிரகடனம்; குருநகரில் எறிகணை வீச்சு தூங்கிக் கொண்டிருந்த நால்வர் பலி, ஐவர் படுகாயம்.

தைப் பகுதியில் மக்கள் கூட்டம் மீது எறிகணை வீச்சு. மூவர் பலி. 30க்கு மேற்பட்டோர் காயம்.
13; பண்ணைக்கடலில் இராணுவ துப்பாக்கிச் சூட்டிற்கு மீனவ இளைஞர் பலி.
15: பேராசிரியர் அ. துரைராசாவின் மறைவையொட்டி தேசியத்தலைவர் பிரபாகரன் அனுதாபச் செய்தி பேராசிரியர் துரைராசாவின் பூதவுடல் தீயுடன் சங்கமம்.
17: கந்தளாய் வாவியைக் கடக்கமுயன்ற பொலிசாரின் படகு மீது புலிகள் தாக்குதல். இரண்டு பொலிசார் பலி,
19: முல்லை மாவட்டம் முத்திரைக்குளம் அணைக்கட்டை காவல் காக்க வந்த இராணுவம் மீது புலிகள் அதிரடி, இரண்டு இராணுவத்தினர் பலி ஆயுதங்கள் மீட்பு, போராளி ஒருவர் வீரச்சாவு.
21: விமானக் குண்டு வீச்சுக்களைகண்டித்துயாழ் நகரில்கூட்டுறவாளரும் மக்களும் ஆர்ப்பாட்டப் பேரணி.
23: விளான் பகுதியில் முன்னேற முயன்ற இராணுவம் மீது புலிகள் தாக்குதல்;
25: மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் புலிகளின் தாக்குதலுக்கு ஒருபொலிசார் பலி ஆயுதம் மீட்பு
26: திருமலையில் குண்டு வீச்சுதாக்குதல் நடத்திய விமானம் மீது புலிகள் தாக்குதல். விமானம் சேதம்

ண்டி மீது இராணுவம் எறிகணை வீச்சு. சிறுமி பலி
29: திருகோணமலை பன்மதவாச்சிக்கும் வேப்பங்குளத்துக்கும் இடையில் வைத்து விமானப்படையினர் மீது புலிகள் தாக்குதல். ஒருவர் பலி ஆயுதங்கள் மீட்பு.

### ஜுலை

02: பூநகரி தவளை நட்வடிக்கைக்கு துணைநின்று பலாலி கூட்டுப்படைத்தளத்தினுள் கரும்புலிகளாகப் புகுந்து வீரச்சாவடைந்த 3 கரும்புலிகளின் வீரச்சாவு அறிவிப்பு.
03: தமிழீழத்தின் முதலாவது சட்டக்கல்லூரி திறந்துவைப்பு.
09: வவுனியா சேமமடுவில் இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் மூன்று பொதுமக்கள் பலி
12: வவுனியா மாவட்டம் பூவரசங்குளம் பகுதியில் மோதல். இராணுவ அதிகாரி, சிப்பாய் பலி,
18: திருகோணமலையில் மோதல், இராணுவ அதிகாரி பலி.
19: தமிழீழ நிர்வாக சேவை உதயம் யாழ். நகரில் பணிமனை திறப்பு.
20; வல்வெட்டித்துறையில் குடியிருப்புகள் மீது விமானக்குண்டு வீச்சு. குடும்பஸ்தர் பலி. ஒருவர்படுகாயம்
21: பண்டத்தரிப்பில் முன்னேற முயன்ற படையினர் மீது புலிகள் தாக்குதல். பண்டத்தரிப்பில் எறிகணை வீச்சுக்கு ஒருவர்பலி 12 பேர் காயம் வல்வெட்டித் துறையில் விமானக் குண்டு வீச்சு ஒருவர்பலி நால்வர் காயம். ஆஸ்பத்திரி சேதம்.
25: யாழ் போதனா மருத்துவமனை மீது இராணுவம் எறிகணை வீச்சு. சத்திரசிகிச்சைப் பிரிவினுள் எறிகணை புகுந்தது.
30: பிரமநாதன் குளம் பகுதியில் இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல்; தமிழீழ நிர்வாகசேவை வவுனியாவில் ஆரம்பம்
31: யாழ். மத்தியகல்லூரி 175-வதுஆண்டு நிறைவு விழா. தேசியத் தலைவர் வே. பிரபாகரன் வாழ்த்துச்

விடுவிப்பு; ஆறா வது தமிழீழ நீதிமன்றம் முல்லைத்தீவில் திறப்பு.

11: முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணியில் புக்காரா தாக்குதல் கணவன், மனைவி பலி. ஒருவர் காயம்.

15: யாழ் போதனா மருத்துவமனை பாதுகாப்பு வலயத்தினுள் இராணுவம் நள்ளிரவு எறிகணைத் தாக்குதல், நான்கு பொதுமக்கள் காயம்.

21: பூநகரிக்கு அருகே மீன்பிடிப் படகுகள் மீது இராணுவம் சூடு ஒருவர் பலி இருவர் கைது.

22: வவுனியா கோட்டம் ''தாயகம்'' சிறுவர் இல்லம் இரண்டாம் ஆண்டில்

26: கொழும்பு றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார் புலிகளின் பிரதிநிதிகளுடன் யாழ்ப்பாணத்தில் சந்திப்பு.

27: யாழ். போதனா மருத்துவமனை பாதுகாப்பு வலயத்தினுள் எறிகணை வீச்சு

28: தமிழீழ காவல்துறையினரின் பொறுப்பில் இருந்த சிங்கள மீனவர் ஒருவர் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் பணிப்பின் பேரில் விடுவிப்பு

## பெப்ரவரி

01: இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு மட்டக்களப்பில் இரு பொதுமக்கள் பலி.

12: விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் இந்துக் குருமார் சந்திப்பு

15: மன்னார் மாவட்டம் நாச்சிக்குடாவில் விமானக் குண்டுவீச்சு மூன்று பொதுமக்கள் பலி, எட்டுப் பேர் காயம்.

16: விடுதலைப் புலிகள் பாணவரமைப்பினரால் அறிவியற் கழகம் திறப்பு; மன்னார் நாச்சிக்குடாவில் விமானக் குண்டுவீச்சு ஒருவர் பலி.

17. சுழிபுரத்தில் மீனவர் மீது உலங்குவானூர்தி தாக்குதல்; ஒருவர் பலி

தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரனால் விடுவிப்பு

26: அல்லிப்பளை, ஆலங்கேணிப் பகுதியில் விமானக் குண்டுவீச்சு, ஒருவர் பலி.

28: மணலாற்றில் புலிகள் அதிரடி. நான்கு படையினர் பலி ஆயுதங்கள் மீட்பு; கேரதீவுப் பகுதியில் மீனவர் மீது உலங்குவானூர்தி தாக்குதல் இரு மீனவர் பலி.

## மார்ச்

01; கிழக்கு மாகாணத்திலும் வவுனியா நகரிலும் உள்ளூராட்சித்தேர்தல்

05: பூநகரியில் புலிகள் அதிரடி. 5 இராணுவத்தினர் பலி. ஆயுதங்கள் மீட்பு

06: மண்டைதீவுக் கடற்பரப்பில் மீனவர் மீது தாக்குதல், ஒருவர் பலி இருவர் படுகாயம்.

07- வடமராட்சி கடற்பரப்பில் கடற்படைத் தாக்குதல், 3 மீனவர் பலி, நால்வர் காயம்

09: திருகோணமலையில் அதிரடித் தாக்குதல். சிப்பாய்பலி ஆயுதங்கள்மீட்பு, மன்னார் தீவினுள் தாராபுரம் பகுதியில்இருந்த பொலிஸ் இராணுவ கூட்டு முகாம்மீது புலிகள் அதிரடித் தாக்குதல். ஆறுபடையினர் பலி ஆயுதங்கள் மீட்பு. 3 போராளிகள் வீரச்சாவு.

11: முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த 17 நாடக, இசைக் கலைஞர்களுக்கு தேசியத் தலைவர் வே பிரபாகரன் பரிசில் வழங்கி கௌரவம்: ஊர்காவற்துறைப்பகுதியில்கண்ணிவெடித்தாக்குதல். நான்கு படையினர்பலி. 12 படையினர்படுகாயம்.

12: கடற்படை டோராபடகிலிருந்து பீரங்கித்தாக்குதல் மீனவர் ஒருவர் கருகி மரணம்.

14: மன்னார் தீவினுள் தொடர்காவலரண்கள் மீதுபுலிகள் தாக்குதல் மூன்று பொலிசார் பலி. ஆயுதங்கள் மீட்பு.

15: யாழ். நகரப்பகுதி மீது பலி. ஆயுதங்கள்மீட்பு மூன்று போராளிகள் வீரச்சாவு. துணைப்படையினர்பங்கேற்பு

## ஏப்பிரல்

03: பேராசிரியர் அ. துரைராசாவிற்கு தேசியத் தலைவர் வே. பிரபாகரன் பாராட்டு, விருது வழங்கி கௌரவிப்பு.

04: முல்லை மாவட்டத்தில் 'ஒப்பரேசன் ஜனபூமி'

08: திருகோணமலை மாவட்டம் கும்பிறுப்பிட்டியில் விடுதலைப் புலிகள் அதிவேக அதிரடி. மூன்று இராணுவத்தினர் பலி. ஆயுதங்கள் மீட்பு; அச்சுவேலியில் இரவு நேர எறிகணை வீச்சு. மூவர் பலி மன்னார்-வன்னி-முல்லையில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புநடத்திய 18 நாள் பண்பாட்டு பவனி ஆரம்பம்

13: திருகோணமலைபன்மதவாச்சியில் விமானப் படையினர் மீது தாக்குதல். ஆயுதங்கள் மீட்பு.

14: குருநகர் மீது இரவு எறிகணை வீச்சு. ஒருவர் பலி. 18 பேர் காயம்.

16: திருகோணமலை மாவட்டம் ஊராலைச்சந்தி பொலிஸ் காவலரண் மீது புலிகள் தாக்குல். ஒரு பொலிசார் பலி. ஆயுதங்கள் மீட்பு.

17: பூநகரி - கல்முனைப்பகுதியில் மீனவர் மீது

07: வன்னி மாவட்டத்தில் இராணுவ காவலரண் மீது புலிகள் தாக்குதல். 5 படையினர் பலி. பலர் படுகாயம். ஆயுதங்கள் மீட்பு. மன்னர்பள்ளிமுனை பொலிஸ் நிலையம் மீது புலிகள் தாக்குதல். இரு பொலிசார் பலி ஐவர் காயம் ஆயுதங்கள் மீட்பு. ஒரு போராளி வீரச்சாவு.


18; புன்னாலைக் கட்டுவனில் புலிகள் அதிரடி. இரு சிப்பாய்கள் பலி. ஆயுதங்கள்மீட்பு ஒரு போராளி வீரச்சாவு.

20: திருவடிநிலை கடற்பகுதியில் மீனவர் மீது பீரங்கி தாக்கு ஒரு மீனவர் பலி.


21: ஒலிப்பதிவாளர் துரைராசா நித்தியானந்தன் காலமானார் நாட்டுப் பற்றாளர் என தேசியத் தலைவர் வே. பிரபாகரன் கௌரவம்

22: நீர்வேலியில் விமானக் குண்டு வீச்சு. தந்தை மகள் உட்பட மூவர் பலி; மட்டக்களப்பில் பொலிசார் மீது புலிகள் தாக்குதல். இரு பொலிசார் பலி. வெடிப்பொருள்கள் மீட்பு.

23: யாழ் நகரில் முதலாவது தமிழீழ வைப்பகம் திறப்பு.



கற்பிட்டியில் மூழ்கடிக்கப்பட்ட ''சாகரவர்த்தனா'' யுத்தக்கப்பல்



யுத்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டபோது கடற்புலிகளால் கைது செய்யப்பட்ட கப்பலின் தளபதியும் அதிகாரியும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியுடன்

12. காரைநகரினுள் புலிகள் அதிரடி. நான்கு கடற்படையினர் பலி ஆறு பேர் காயம், வசாவிளான் பத்தமேனிப் பகுதியில் முன்னேற முயன்ற இராணுவம் மீது புலிகள் தாக்குதல், குருநகர் சந்

விமானி படுகாயம், ரோந்து சென்ற விமானப்படையினர் மீது கன்னியாவிற்கும் வில்கம் விகாரைக்குமிடையில் வைத்து புலிகள் தாக்குதல்: ஒருவர் பலி, ஆயுதம் மீட்பு,

28: மட்டக்களப்பு சித்தா

04. மல்லாகம் குடியிருப்புகள் மீது விமானக் குண்டு வீச்சு: இருவர் பலி ஒன்பது பேர் படுகாயம்: அச்சுவேலியில் உணவகம் மீது எறிக

யாவில் ஆரம்பம்

31: யாழ். மத்தியகல்லூரி 175-வது ஆண்டு நிறைவு விழா. தேசியத் தலைவர் வே. பிரபாகரன் வாழ்த்துச் செய்தி; புதுக்குடியிருப்பில் மீனவர் மீது கடற்படை தாக்குதல்.

## ஆகஸ்ட்

02; பலாலி விமானத்தளம் மீது கரும்புலிகள் ஊடுருவித் தாக்குதல் ''பெல்'' ரக உலங்கு வானூர்தி ''பவல்'' கவச வாகனம் முற்றாக அழிப்பு படையினருக்கு பலத்த உயிரிழப்பு. ஆறு கரும்புலிகள், துணையாகச் சென்ற ஒரு போராளி வீரச்சாவு; மண்டைதீவு இராணுவம் தாக்குதல் இரு மீனவர் பலி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இனிநூலகம்.

# வை 1994

...இருவர் பலி இருவர் காயம்.

06: [illegible] சக்கோட்டை கடற்பரப்பில் கடற்படையின் சூட்டுக்கு தந்தையும் மகனும் பலி.

10: தெல்லிப்பழை சேனைல் [illegible] சிறுவர் பூங்கா திறப்பு; அராலித்துறையில் புலிகள் அதிரடி மூன்று இராணுவத்தினர் பலி இரண்டு சடலங்கள், ஆயுதங்கள் மீட்பு.

11: மட்டக்களப்பு கட்டு முறிவு இராணுவ முகாம் தகர்ப்பு 25 இராணுவத்தினர் பலி, பலர்படுகாயம் ஆயுதங்கள் மீட்பு 17 பேர்ராளிகள் வீரச்சாவு; மன்னார் நகரில் புலிகளின் கொமாண்டோ அணி அதிரடி 10 பொலிசார் பலி ஆயுதங்கள் மீட்பு 5 புலிகள் வீரச்சாவு

12: பூநகரிப்பகுதியில் மோதல்; இரண்டு இராணுவத்தினர் பலி

13: குடாநாட்டின் பலபகுதிகள் மீதும் படையினர் எறிகணை வீச்சு 9 பேர்பலி

14: திருகோணமலை பாவட்டம் அஜித்தோயாபகுதியில் புலிகள் அதிரடி இருபடையினர் பலி ஆயுதங்கள் மீட்பு.

16: காங்கேசன்துறைத் துறைமுகத்தில் தரித்துநின்ற சண்காணிப்புக் கப்பலும் ஒரு இழுவைப்படகும் கடற்புலிகளின் தாக்குதலால் மூழ்கடிப்பு முதற்பெண்கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி வீரச்சாவு; அச்சுவேலி பகுதி மீது எறிகணைவீச்சு ஆறு பேர்பலி.

18: ஹபறணை காட்டுப் பகுதியில் புலிகளின் தாக்குதலுக்கு இரண்டு இராணுவத்தினர் பலி.

19: முல்லைத்தீவு மாவட்டத்தில் புலிகள் அதிரடி இருசிப்பாய்கள் பலி ஆயுதங்கள் மீட்பு

26: நிபந்தனையற்ற பேச்சிற்கும் யுத்த நிறுத்தம் செய்வதற்கும் தயார் என புலிகள் அறிவிப்பு

27: பத்தமேனிப்பகுதியில் ஷெல்வீச்சுக்கு ஒருவர் பலி

31: [illegible] கடற்பரப்பில் கடற்படை பீரங்கி தாக்கு ஒருவர் பலி, ஒருவர் கடற்படையால் கைது

## செப்டெம்பர்

02: சந்திரிகா அரசிற்கு நல்லெண்ண சமிக்கையாக விடுதலைப்புலிகளின் காவலில் யுத்தக்கைதிகளாக இருந்த 10 பொலிசார் தேசியத்தலைவர் வே பிரபாகரனால் விடுவிப்பு. யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தைக்கு தயார் எனவும் தலைவர் அறிவிப்பு.

06: நெடுங்கேணி பதவியா கட்டுக்குளம் மீது காவலிலிருந்த இராணுவம்மீது புலிகள் தாக்குதல். சிப்பாய் பலி ஆயுதங்கள் மீட்பு

08: பூநகரி முகாம்பகுதியில் மோதல் 2படையினர் பலி ஐவர் காயம்.

11: தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அரசாங்கத்துடனான ஆரம்பகட்டப் பேச்சுகளுக்கென நான்கு பிரதிநிதிகளை நியமித்து சிறிலங்கா பிரதமர் சந்திரிகாவிற்கு கடிதம்

13: தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் பேட்டி பி.பி.சியில் ஒலிபரப்பு

15: பதவியாவில் மோதல் இரண்டு பொலிசார் பலி

16: சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பொன்னம்பலம் காலமானார் புல்மோட்டையில் ரோந்து அணிமீது புலிகள் தாக்குதல் 2படையினர் பலி ஆயுதங்கள் மீட்பு.

18: வல்வெட்டித்துறை கடற்பரப்பில் கடற்படையின் சூட்டுக்கு மீனவர் பலி.

19: கற்பிட்டிக்கடலில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான "சாகரவர்த்தனா" எனும் போர்க்கப்பல் கடற்புலிகளின் தாக்குதலால் மூழ்கடிப்பு 30க்கு மேற்பட்ட கடற்படையினர் பலி கப்பலின் தளபதியும் அதிகாரியும் புலிகளால் கைது. நான்கு பீரங்கிகள் அழிப்பு இரு 50கலிபர் துப்பாக்கிகள் மீட்பு கடற்புலிகளின் மகளிர்படைப்பிரிவு விசேட தளபதி லெப்டினண்ட் கேணல் நளாயினி உட்பட நான்கு கடற்கரும்புலிகள் வீரச்சாவு

21: திருமலை மாவட்டம் பள்ளிக்குடியிருப்பு சிறிலங்கா முகாமருகே மக்களைச் சோதனையிட காத்திருந்த இராணுவம் மீது மாட்டுவண்டிலில் சென்று புலிகள் தாக்குதல் மூன்று படையினர் பலி ஆயுதங்கள் மீட்பு: மட்டக்களப்பில் புலிகள் கொமாண்டோ தாக்குதல் இரு படையினர் பலி ஆயுதங்கள் மீட்பு.

25: வலலாய் - கதிரிப்பாய் ஊடாக 'ஜெயகந்த' இராணுவ நடவடிக்கை மூலம் முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது புலிகள் எதிர்த்தாக்குதல். இராணுவ அதிகாரி உட்பட மூன்று படையினர் பலி. 25 படையினர் காயம், நான்கு போராளிகள் வீரச்சாவு; அச்சுவேலிப் பகுதியில் எறிகணை வீச்சு, ஹெலி தாக்குதலில் ஆறுபேர்பலி, 30 பேர் காயம், வல்லைப் பாலம் சேதம்.

27: பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்படைத் தாக்குதலுக்கு இரு மீனவர் பலி, இருவர் காயம் நால்வர் கைது; காத்தான்குடியில் காவலரண் மீது தாக்குதல். சிப்பாய் பலி. ஆயுதம்மீட்பு,

28: மட்டக்களப்பு தொப்பிக்கல காட்டில் உள்ள காத்தான்குளம் பகுதியில் புலிகள் தாக்குதல். 14 இராணுவத்தினர் பலி, 5 பேர் காயம், ஆயுதங்கள் மீட்பு.



யாழ்ப்பாணத்தில் நடந்த புலிகள் அரசு முதலாம் கட்டப் பேச்சுவார்த்தை.

## ஒக்டோபர்

04: போராளிக் கலைஞர் நிதர்சனின் மிருதங்க அரங்கேற்றம்

07: ரோந்து அணி மீது திருமலையில் புலிகள் தாக்குதல். இரு இராணுவத்தினர் பலி

09: சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஆயுத தளபாடங்கள் மற்றும் உணவுப் பொருட்களை விநியோகிக்கும் ''ஓசியன் ரேட்'' கப்பல் வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கடற்புலிகளின் விசேட அணியினரால் மூழ்கடிப்பு நவீனராடர் மீட்பு

11: மன்னார்தீவில் படையினர் மீது புலிகள் தாக்குதல். இருபடையினர் பலி. ஆயுதங்கள் மீட்பு.

12: மணலாற்றில் புலிகள் அதிரடி எட்டு இராணுவத்தினர்பலி, ஆயுதங்கள் மீட்பு; கிழக்கில் பொலிஸ் பொன்ஸடோவர் மீது புலிகள் தாக்கு ஆயுதங்கள்மீட்பு

13: சந்திரிகா அரசு - புலிகள் முதற்கட்டப் பேச்சு யாழ்ப்பாணத்தில் ஆரம்பம். அரச பிரதிநிதிகள் உலங்குவானூர்தி மூலம் யாழ்ப்பாணம்வருகை; கிழக்கில் கண்ணிவெடித் தாக்குதல் அதிகாரி உட்பட நான்கு பொலிசார் பலி ஆயுதங்கள் மீட்பு

14: பேச்சு வார்த்தை குறித்து புலிகள்-அரசு கூட்டறிக்கை

17: பருத்தித்துறை கற்கோவளம் கடற்பகுதியில் கடற்படைச் சூட்டுக்கு இரண்டு மீனவர் பலி

18: புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒன்பது தென்பகுதி மீனவர்கள் விடுவிப்பு

21: மட்டக்களப்பு மாவட்டம் தும்பங்கேணிப்பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மீது தாக்குதல். இருவர் பலி, ஆயுதங்கள் மீட்பு

22: குடும்பப் பிணக்குகளை சுமுகமாக தீர்க்க குடும்ப ஆலோசனைச் சபை ஆரம்பம்

24: அம்பாறை மாவட்டம் பண்ணலகம அதிரடிப் படை முகாமிலிருந்து வெளியேறிய விசேட அதிரடிப் படையினர் மீது புலிகள் தாக்குதல். ஒருவர் பலி, ஆயுதங்கள் மீட்பு

27: மன்னார் அரிப்புத் துறைமுனை கடற்பரப்பில் கடற்படை தாக்கி ஒன்பது மீனவர்பலி

## நவம்பர்

01: காந்தரூபன் அறிவுச் சோலை முதலாம் ஆண்டு நிறைவு விழா. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவருக்கு தேசியத் தலைவர் வே. பிரபாகரன் பரிசில் வழங்கினார்

08: வெற்றிலைக்கேணியில் தரையிறக்கும் போர்க்கப்பல் ''பபதா'' மீது கடற்கரும்புலிகள் தாக்குதல். கப்பலுக்கு பாரியசேதம் கடற்கரும்புலி மேஜர் வித்தி வீரச்சாவு.

(6-ம்பக்கம் பார்க்க)

# ஐ. தே. க.வின் ஆட்சியை பறித்த ஆண்டு

## சிறிலங்கா



ஜன 09: சூரியகந்தவில் மனித புதைகுழிகள் மேலும் கண்டுபிடிப்பு

ஜன 18: கடல்வலய தடைச் சட்டம் சிறிலங்கா அரசால் பிரகடனம்

ஜன 19: இராணுவம் பயன்...

...ப்பு மூவர்பலி. நான்குபெரிய விடுதிகளில் பாரிய சேதம் எல்லாளன் படை உரிமை கோரியது

ஏப்பி 21: புதிய தரையிறக்கும் கப்பல் சிறிலங்கா கடற்படையில் இணைப்பு

...யல் பாராளுமன்ற உறுப்பினராக காமினி திசாநாயக்கா சத்தியப்பிரமாணம்

ஜூன் 09: ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினராக ரொனிடிமெல் பதவி ஏற்பு

ஜூன் 10: மேல் மாகாணசபை ஆளுனர் எஸ். சர்...

# கறுப்புப் பூ மலர்ந்தது

## உலகம்



...யூத வாசியொருவர் ஹெப்ரோன் மசூதியினுள் புகுந்து சரமாரிச் சூடு, 30 பாலஸ்தீனியர்கள் பலி

மார்ச் 02: அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட... தால் இலங்கைத் ...

...தடையை மேலும் இரு வருடங்கள் நீடிக்க தமிழக சட்டப் பேரவையில் பிரேரணை

ஏப் 22: முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி நிக்...

தப் புதை குழிகள் மேலும் கண்டுபிடிப்பு
ஜன 18: கடல்வலய தடைச் சட்டம் சிறிலங்கா அரசால் பிரகடனம்
ஜன 19: இராணுவம் பயன்படுத்தும் பஸ்ஸினுள் ரம்பாவசந்திக்கருகே குண்டு வெடிப்பு.
ஜன 27: காமினி திசாநாயக்கா ஐ.தே.க. வில் மீண்டும் இணைவு
பெப் 17: விமானப் படைத் தளபதியாக எயர் வைஸ் மார்சல் ஒலிவர் எம். ரணசிங்கா பதவி ஏற்பு
மார்ச் 24: தென்மாகாண சபைத்தேர்தல் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி
மார்ச் 28: தென்மாகாண சபை முதல்வராக பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் அமரசிறி



ஏப்பி 04: ஐ.தே.க. செயற்குழு கூட்டம்; டி.பி விஜேதுங்கா- பிரேமதாசா ஆதரவாளரிடையே கடும் வாக்குவாதம்.
ஏப்பி 04: பேருவள பிரதேச சபையின் சிறிலங்கா

ஏப்பி 21: புதிய தரையிறக்கும் கப்பல் சிறிலங்கா கடற்படையில் இணைப்பு
மே 01: ஐக்கிய தேசியக்கட்சிப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து சிறிசேனகூரே ராஜினாமா.
மே 02: ஐ.தே.க. பொதுச் செயலாளராக காமினி விஜேசேகரா நியமனம்
மே 12: பாதாள உலக தலைவன் சொத்தி உபாலி கைது
மே 14: முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை குறித்து ஆராய விசாரணைக் குழு தேவை என பிரேமதாசா குடும்பத்தினர் கோரிக்கை.
மே 17: ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டி

மன்ற உறுப்பினராக ரொனிடிமெல் பதவி ஏற்பு
ஜூன் 10: மேல்மாகாணசபை ஆளுனர் எஸ. சர்வானந்தா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவினால் பதவி நீக்கம்
ஜூன் 16: மதவாச்சி கெப்பிட்டி கொல்லாவ பொலிஸ் நிலையம் புலிகளால் தாக்கி அழிப்பு. 6 பொலிசார் பலி நால்வர் காயம் ஆயுதங்கள் மீட்பு.
ஜூன் 17: டி.பி.விஜேதுங்கா அமைச்சரவையில் மாற்றம் காமினி திசாநாயக்கா, ரொனி டிமெலிற்கு அமைச்சர்பதவி. அலிக் அலுவ்கார பதவிநீக்கம்
ஜூன் 20: பொது நிர்வாக அமைச்சராக அலிக் அலுவிகார பதவி ஏற்பு
ஜூன் 24: சிறிலங்காவின் 9-வது பாராளுமன்றம் கலைப்பு
ஜூலை 09: அனுராதபுரரயில் நிலையத்தில் யாழ்தேவி- ரயிலில் குண்டு வெடிப்பு இருவர் பலி 12பேர் காயம்
ஜூலை 12: ஐ.தே.க. பொ. ஐ.மு. ஆதரவாளரிடையே மோதல் அமைச்சர் உட்பட 200பேர்காயம்
ஜூலை 18: அனுராதபுரம் பொலிஸ்விடுதி மீது புலிகள் தாக்குதல் ஆயுதங்கள் மீட்பு
ஜூலை 20: ஜனாதிபதிவிஜேதுங்கா கலந்து கொண்ட எம்பிலிப்பிட்டிய கூட்டத்தில் மேடை சரிந்து வீழ்ந்து ஆறுபேர் காயம்
ஆக 12: அத்தனகலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி மாகாண சபை உறுப்பினர் சுட்டுக்கொலை
ஆக 16: சிறிலங்காவில் பொதுத்தேர்தல் பொதுஜன ஐக்கிய முன்னணி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியது.
ஆக 19: சிறிலங்காவின் பிரதமராக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா பதவி ஏற்பு 22

(6-ம் பக்கம் பார்க்க)



தென்னாபிரிக்கஜனாதிபதி நெல்சன் மண்டேலா.

ஜன 06: கனடா ரொரன்ரோவில் இலங்கைத் தமிழர் கோஷ்டி மோதல்; இளைஞர் பலி; பலர் காயம்
ஜன 08: காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் சமாதிநிலை
ஜன 13: பாரிஸ் ஈழநாடு அலுவலகத்தில் குண்டுவெடிப்பு
ஜன 17: தளபதி கிட்டு பயணம் செய்த 'எம் வி அஹத்' கப்பல் மாலுமிகள் மீது விசாகப்பட்டினம் சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல்
ஜன 17: அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவில் நிலநடுக்கம் 27 பேர் பலி, கட்டடங்கள் சேதம்
பெப் 03: டென்மார்க்கிற்கும் சுவீடனுக்கும் இடையில் ஓர்சண்ட் நீரிணையில் 36 தமிழ் அகதிகள் தத்தளிப்பு
பெப் 06: பொஸ்னிய தலைநகர் சரஜேவோவில் பிரதான சந்தையில் மோட்டார்குண்டு வீழ்ந்து வெடித்ததில் 68 பொதுமக்கள் பலி
பெப் 25: மேற்கு கரையில் குடியேறியிருந்த

னியர்கள் பலி
மார்ச் 02: அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டதால் இலங்கைத் தமிழர் ஒருவர் சுவீடனில் தீக்குளிப்பு
ஏப் 06: றுவாண்டா ஜனாதிபதி ஜுவினால் ஹபயாரிமனாவும், புருண்டி ஜனாதிபதி சிப்ரியன் நிற்றாரிமிராவும் பயணம் செய்த விமானம் றுவாண்டா எல்லையருகே சுட்டு வீழ்த்தப்பட்டது இதைத் தொடர்ந்து றுவாண்டாவில் ஆரம்பமான உள்நாட்டுப் போரில் பல லட்சம் மக்கள் பலியாகினர்
ஏப் 12: தமிழகத்தைச் சேர்ந்த சிறுவன் பி. குற்றாலீஸ்வரன் (வயது 12) பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தார்
ஏப் 15: 120 க்கும் மேற்பட்ட நாடுகள் காட் வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்து
ஏப் 17: சென்னையில் வை. கோபால்சாமி அணியினர் பேரணி
ஏப் 19: சென்னையில் வை. கோபால்சாமி அணியின் முக்கிய பிரமுகர் ஏழுமலை கொலை
ஏப் 20: புலிகள் மீதான

ரணை
ஏப் 22: முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் 81ஆம் வயதில் காலமானார்
ஏப் 26: தென்னாபிரிக்காவில் அனைத்துஇன மக்கள் பங்குபற்றும் தேர்தல் ஆரம்பம். தேர்தல் முடிவுகள் மே 5 இல் அறிவிக்கப்பட்டபோது கறுப்பினத் தலைவர் மண்டேலா 62 65 சதவீத வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவானார்
மே 4: மேற்குகரையிலும். காஸாவிலும் பாலஸ்தீனருக்கு சுயாட்சி கிடைக்கும் வகையில் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் இஸ்ரேலும் ஒப்பந்தத்தில் கைச்சாத்து; சிறிகரிக் கோட்டாவிலிருந்து இந்திய ஏ.எஸ். எல்.வி. ஏவுவாகனம் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.
மே 10: தென்னாபிரிக்காவின் முதல்கறுப்பின ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா பதவி ஏற்பு
மே 15: புலிகள் மீதான தடைச் சட்டம் இந்தியாவில் மேலும் இருவருடங்கள் நீடிப்பு

(6-ம் பக்கம் பார்க்க)

## 94-ம் ஆண்டில் நிகழ்ந்த ஒரு பிரபஞ்ச அற்புதம்

ஆயிரம் ஆண்டிற்கு- ஆகக்குறைந்தது ஒரு நூற்றாண்டுக்கு ஒருமுறை நிகழக்கூடிய பிரபஞ்ச அற்புதமொன்றைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் இவ் ஆண்டு (1994) வானியலாளர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் கிட்டியது வியாழன் கிரகமும் ஷூ-மேக்கர் லெவி என்ற வால் வெள்ளியும் மோதுகின்ற காட்சியை தெளிவாகக் காண்பதற்கு இவர்கள் முயற்சி எடுத்துவந்தனர்.

இந்த வால் வெள்ளி ஏற்கனவே வியாழனின் ஈர்ப்புக்கு உட்பட்டு 21 துண்டுகளாக உடைந்திருந்தது. இந்த 21 துண்டுகளும் ஒன்றன் பின் ஒன்றாக வியாழன் கோளுடன் மோதும் என அறிவிக்கப்பட்டிருந்தது இந்தவகையில் ஜூலை16ம்திகதி அதிகாலை 1.48 மணியளவில் ஷூ-மேக்கர் லெவி9 வியாழனுடன் மோதியது ஜூலை 19ம் திகதி அதிகாலை ஷூ-மேக்கர் லெவியின் மிகப்பெரிய (ஏழாவது) துண்டு வியாழனுடன் மோதியது. ஜூலை 21ம்திகதி இதன் 21-வது (இறுதி) துண்டு வியாழன் கிரகத்துடன் மோதியது.



ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதிவேட்பாளர் காமினி திசாநாயக்காகொல்லப்பட்ட பாலத்துறை குண்டு வெடிப்பு

தொடங்கொட பதவி ஏற்பு.
ஏப்பி 02: சீனாவிடமிருந்து யுத்தக் கப்பல்கள் கொள்வனவிற்கு ஒப்பந்தம் கைச்சாத்து.

சுதந்திரக்கட்சி உறுப்பினர் சுட்டுக்கொலை.
ஏப்பி 08: கொழும்பு உல்லாசப் பயணவிடுதிகளில் தொடர்குண்டு வெடி

யல் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச். அமீட் பதவி துறப்பு
மே 19: ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டி

## தமிழீழம்

09: வெற்றிலைக் கேணியில் புலிகளின் மகளிர்படையணி அதிரடி. அதிகாரி உட்பட ஐந்து இராணுவத்தினர் பலி ஆயுதங்கள் மீட்பு ஒரு போராளி வீரச்சாவு.
13: தேசியத்தலைவர் பிரபாகரன் நல்லெண்ண சமிக்கையாக ஒருவார கால தாக்குதல் நிறுத்தம் அறிவிப்பு.
17: நெடுங்கேணிப் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் மூத்த தளபதி லெப் கேணல்மல்லி(அமுதன்) உட்பட இரு போராளிகள் வீரச்சாவு லெப் கேணல் மல்லியின் தலையை இராணுவம் வெட்டி எடுத்துச் சென்றது; கிளாலியிருந்து யாழ் சென்ற பயணிகள் வண்டிமீது உலங்குவானூர்தி தாக்குதல் சாரதி உட்பட மூவர்காயம்
21: மாவீரர் வாரத்தை யொட்டி தலைவர் வே: பிரபாகரனின் பணிப்பின் பேரில் 33 கைதிகள் விடுவிப்பு, ஏழுபேருக்கு தண்டனை குறைப்பு.
22: மட்டக்களப்பு காட்டுப் பகுதியில் இராணுவம் பாரிய இராணுவ நடவடிக்கை.
26: ''தமிழீழ மாவீரர் நிதியம்'' ஆரம்பம்
27: தேசியத்தலைவர் வே. பிரபாகரன் மாவீரர் நாள் செய்தி; தேசியத்தலைவர் வே. பிரபாகரனின்பணிப்பின்பேரில் இரு மீனவக்கைதிகள் விடுவிப்பு; ''மாவீரர் சோலை சேமிப்புத்திட்டம்'' ஆரம்பம்

### டிசெம்பர்

05: வவுனியா மாவட்ட தமிழீழ நீதிமன்றம் திறப்பு
08: அம்பாறை மாவட்டத்தில் புலிகள் அதிரடி அதிகாரிகள் உட்பட ஏழு விசேட அதிரடி படையினர் பலி. ஆயுதங்கள் மீட்பு 'பவள்' கவசவாகனம் உட்பட இரண்டு இராணுவ வாகனங்கள் சேதம் ஒருபோராளி வீரச்சாவு.
09: தேசியத்தலைவர் வே. பிரபாகரன் சிறிலங்கா அரசிற்கு கடிதம்
10: வங்காலையில் இராணுவக்காவலரண்கள் புலிகளால் அழிப்பு நான்கு இராணுவத்தினர்பலி ஆயுதங்கள் மீட்பு மூன்று போராளிகள் வீரச்சாவு.
11: மன்னார் மாவட்டம் முள்ளிக்குளம் கடலில் மோதல்
17: மட்டக்களப்பு மாவட்டம்சத்துருக்கொண்டானில் போராளி ஒருவரின் கத்திவெட்டிற்கு சிப்பாய் ஒருவர்பலி, ஆயுதமும் கைப்பற்றப்பட்டது.
19: ஜனகபுரவில் புலிகள் தாக்குதல் மூன்று இராணுவத்தினர்பலி
20: காரைநகரில் புலிகள் தாக்குதல் சிப்பாய் ஒருவர் பலி
22: சந்திரிகா அரசின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றம் குறித்து புலிகள் மக்களுக்கு விளக்கம்
23: கடற்படை விநியோக கப்பல் 'டாறா' முல்லைக்கடற்பரப்பில் மூழ்கியது
24: மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப்பகுதியில் தேடுதல் நடத்த முயன்ற இராணுவம்மீது கண்ணிவெடித்தாக்குதல் 5 படையினர்பலி 20 பேர் காயம்
27: மூதூர் இறங்குதுறைப் பகுதி காவலரண் புலிகளால் அழிப்பு இரண்டு இராணுவத்தினர்பலி.
28: மட்டக்களப்பு மாவட்டம் பூமாஞ்சோலை இராணுவமுகாம் புலிகளால் முற்றாக அழிப்பு 18 போராளிகள் வீரச்சாவு.

# இனப்பிரச்சினை தீர்வும் ஜே. ஆரே தரவேண்டும்


**- முன்னாள் எம். பி பண்டாரநாயக்கா**

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா இன்று ஐ. தே. கவின் ஆலோசகராக இருக்கிறார். அவரே இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வை கட்சிக்கூடாக முன்வைக்க வேண்டும். இவ்வாறு சோசலிச மக்கள் முன்னணித்தலைவரும் முன்னாள் எம். பியுமான எஸ். பி பண்டாரநாயக்கா கூறினார்

பம்பலப்பிட்டியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர், 1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே. ஆர். ஜெயவர்த்தனா கண்டி பாத யாத்திரை மேற்கொண்டார் இதை அன்று அரசு தடுத்தது எனது தொகுதியூடாக பாத யாத்திரை செல்வதை நான் பிரதமர் பண்டார நாயக்கா விடம் கூறி அதை கடுமையாக ஆட்சேபித்திருந்திருந்தேன். நிலைமைகளை உணர்ந்து ஜே. ஆரும் பின்னர் தமது யாத்திரையை கைவிட்டார். எனது மனச்சாட்சிக்கு சரியானதை நான் செய்தேன் இதனால் தான் நானும் ஜே வி. பியினருடன் சிறை இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் அவர் கூறினார்-

## முதலிடம் பெற்றார்



யாழ் சைவ பரிபாலன சபையினரால் அண்மையில் நடத்தப்பட்ட அகில இலங்கை ரீதியான நாவலர்பேச்சுப் போட்டியில் மேற்பிரிவில் மீசாலை வீரசிங்க மகாவித்தியாலயத்தை சேர்ந்த மாணவன் சின்னையா கோகிலன் முதலாம் இடத்தைப்பெற்று அதற்கான தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளார். (86)

# அகதிகளைக் கூட்டிச்சென்ற நெதர்லாந்து பஸ் சாரதிகள் கைது

(கொழும்பு)

இலங்கைத்தமிழர்களை கடந்த நான்கு வருடங்களாக ஐரோப்பிய நாடுகளுள் சட்டவிரோதமாக அனுப்பி வைத்ததாக கூறப்படும் நான்கு பஸ் சாரதிகள் நெதர்லாந்தில் கைதாகியுள்ளனர்.

1991 முதல் இந்த நான்கு பஸ் சாரதிகளும் சட்டவிரோதமாக இவ்வாறு செயற்பட்டு பலகோடி ரூபா பணத்தை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இளைஞர்களான இந்த பஸ் சாரதிகள் போலி பயண ஆவணங்கள், குடியுரிமை சான்றிதழ்கள் என்பவற்றை வழங்கிவந்ததாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. தமது இந்நடவடிக்கைக்காக தனியொருவரிடமிருந்து 5000 டொலரை அதாவது இரண்டரை லட்சம் ரூபாவை இவர்கள் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சமூக ஒழுக்கக்கேடு ஐந்துமாதச் சிறை விதிப்பு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை யங்கூரான் கொலனியைச் சேர்ந்த ஒரு ஆணும் பெண்ணும் சமூக ஒழுக்கக் கேட்டில் ஈடுபட்டதற்காக பருத்தித்துறை நீதிமன்றினால் இருவருக்கும் ஐந்து மாதச் சிறையும் தலா 10 ஆயிரம் ரூபா குற்றப்பணமும் அறவிடப்பட்டது.

மேற்குறித்த இருவரும்முன்னர் ஒரு தடவை இதே குற்றத்திற்காக வல்வெட்டித்துறை காவல்துறையினரால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவர்கள் இருவரும் முன்னரும் பருத்தித்துறை நீதிமன்ற நீதியாளரினால் தண்டிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (யோ)

## மட்டை வெட்ட ஏறியவர் காயம்

(தென்மராட்சி)

பனை வடலியில் விறகுக்காக மட்டைவெட்ட ஏறியவர் தவறுதலாக விழுந்து படுகாயமடைந்தார்.

ஆனந்தன் குடியிருப்பு கச்சாய் என்னும் இடத்தில் வசிக்கும் இ. லதிதேவன் என்பவர் கடந்த ... அன்று வீட்டிற்கு விறகு வெட்டுவதற்காக பனைவடலியில் ஏறிய போது தவறுதலாக விழுந்ததில் கருக்கு மட்டை வெட்டிய நிலையில் படுகாயம் அடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார் (86)

## குளம் புனரமைப்பு

முல்லை மாவட்டத்திலுள்ள உடையார் கட்டுக்குளம் கடந்த வருட இறுதிப் பகுதியில் பெய்த பெரும் மழையினால் அரிப்புக்குள்ளாகி உடைப்பெடுத்திருந்தது இதனை துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத் திணைக்கள நிதியினைக் கொண்டு தேச நிர்மாணிகள் புனரமைப்புச் செய்துள்ளனர்.

## சிறிலங்கா

பேர் கொண்ட அமைச்சரவையும் பதவிப்பிரமாணம்
ஆக 24 : எதிர்க்கட்சித் தலைவராகவும் ஐ.தே.கவின் பிரதித் தலைவராகவும் காமினிதிசாநாயக்கா தெரிவு
ஆக 25 : சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றம் முதற்தடவையாக கூடியது சபாநாயகராக கே.பி ரட்ணாயக்கா தெரிவு.
ஆக 31: வடக்கே எடுத்துவரத் தடை விதிக்கப்பட்டிருந்தவற்றில் 28 பொருட்கள் மீதான தடையை நீக்குவது குறித்து சிறிலங்கா அரசு அறிவிப்பு.
செப் 02: சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கத்தின் 24 பிரதி அமைச்சர்கள் பதவி ஏற்பு.
செப் 05: அரசியல் யாப்பு மாற்றம் குறித்த முதல் கூட்டம் சிறிலங்கா பாராளுமன்றத்தில் நடைபெற்றது; பியகம சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் ஊர்வலம் மீது பொலிசார் தாக்குதல் 50 க்கு மேற்பட்டோர் காயம்.
செப் 06: யுத்தநிறுத்தம், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை தொடர்பான தலைவர் பிரபாகரனின் கடிதம் சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவிடம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒப்படைப்பு
செப 09: தலைவர் பிரபாகரனுக்கு சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா கடிதம் ஆரம்ப கட்ட பேச்சுகளுக்கு பிரதிநிதிகள் குறித்த விபரம் அனுப்புமாறு கோரிக்கை.
செப் 21: ஆரம்ப கட்ட பேச்சுகளுக்கு அரச தரப்பு பிரதிநிதிகளை நியமித்து தலைவர் பிரபாகரனுக்கு சிறிலங்கா பிரதமர் சந்திரிகா கடிதம்.
செப் 25: நாத்தாண்டிய பகுதி வயலில் சிறிலங்கா விமானம் வீழ்ந்து நொருங்கியது. இரு விமானிகள் பலி.
ஒக் 17: சந்திரிகாவின் பேட்டி பி, பி. சியில் ஒலிபரப்பு.
ஒக் 24 : கொழும்பு பாலத்துறையில் ஐக்கியதேசியக்கட்சியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் குண்டு வெடிப்பு. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினிதிசாநாயக்கா, மூன்று முன்னாள் அமைச்சர்கள், கட்சியின் பொதுச் செயலாளர், ஐந்து பொலிஸ் உயரதிகாரிகள் உட்பட 61பேர் கொல்லப்பட்டனர் 300க்கும் மேற்பட்டோர் காயம் தற்கொலைகுண்டுத் தாக்குதல் எனவும் தற்கொலைப்படையாளி பெண் எனவும் சந்தேகம்
ஒக் 25 : காமினி திசாநாயக்காவின் மனைவி சிறிமாதிசாநாயக்கா ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு எதிர்க்கட்சித் தலைவராக ரணில் விக்கிரமசிங்க தெரிவு
நவ 01 : காமினி திசாநாயக்கா கொலை தொடர்பாக இந்திய புலனாய்வுத்துறை உதவிகோர அமைச்சரவை முடிவு; பாதுகாப்பு செலவினத்திற்கு 530 கோடி ரூபா மேலதிக நிதி ஒதுக்கீடு
நவ 09 : சிறிலங்காவில் ஜனாதிபதி தேர்தல் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா ஜனாதிபதியாக தெரிவு; பாலத்துறை குண்டு வெடிப்பில் காயமடைந்தஒஸி அபயகுணசேகரா. மரணம்
நவ 12 : சிறிலங்காவின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்கா பதவி ஏற்பு ; ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவராக ரணில்பதவி ஏற்பு
நவ 14 : சிறிலங்காவின் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவிஏற்பு
நவ 22 : சந்திரிகா அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிப்பு.

## திருடப்பட்ட சைக்கிள் மேலும் சில மீட்பு

(யாழ்ப்பாணம்)

திருட்டுப் போன மேலும் இரண்டு சைக்கிள்கள் காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளன.

சென்ற மாதம் 22-ம் திகதி திருநெல்வேலி சந்தையடியிலும், 29-ம் திகதி ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயிலடியிலும் திருட்டுப் போன இரு சைக்கிள்களுமே மீட்கப்பட்டு உரியவர்களிடம்ஒப்படைக்கப்பட்டதாகவும், இத்திருட்டுக்களுடன் தொடர்புடைய நபர்கள் இருவர் தடுப்புக் காவலில் உள்ளதாகவும் தெரிவருகிறது. (22)

## கொடுப்பனவு

1991-ம் ஆண்டு நடைபெற்ற சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் ஜனவரி மாதம் 3-ம், 4-ம், 5-ம் திகதிகளில் பி. ப. 2-00 மணியில் இருந்து 4-00 மணி வரை சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தில் அவ்வப்பாட முதன்மை ஆசிரியர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் படி கேட்கப்படுகின்றனர்.

சுட்டுவீழ்த்தப்பட்ட இராணுவ உலங்குவானூர்தி

# கைதாகிய அமெரிக்க பைலட்டை

## அதிரடிப்படை மீட்பு

சந்தனக்கடத்தல்காரன் வீரப்பனால் கடந்த 3 ஆம் திகதி திருமுகை காட்டில் கடத்தப்பட்ட தமிழக காவல்துறை லஞ்ச ஒழிப்பு கண்கா

தனையற்ற பேச்சு வார்த்தை தொடர்பான தலைவர் பிரபாகரனின் கடிதம் சிறிலங்கா பிரதமர் சந்

கள் உட்பட 61பேர் கொல்லப்பட்டனர் 300க்கும் மேற்பட்டோர் காயம் தற்கொலைகுண்டுத் தாக்குதல் என

நவ 22 : சந்திரிகா அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிப்பு.

# உலகம்

மே 18: காஸாபகுதியிலிருந்து இஸ்ரேலிய படைகள் முற்று முழுதாக வாபஸ்.

ஜூலை 1: பி. எல். ஒ. தலைவர் அரபாத் 27 வருட அஞ்ஞாதவாசத்தின் பின் காஸாவில் காலடி வைத்தார்.

ஜூலை 7: இருமாதகால கடும் போரின் பின் வடயேமன் படைகள் தென்யேமன் தலைநகர் ஏடனை கைப்பற்றினர்.

ஜூலை 8: வடகொரிய ஜனாதிபதி கிம் இல் சுங் திடீர் மரணம்.

ஜூலை 18: ஆர்ஜன்டீனாவின் தலைநகர் புவனர்ஸ் அயர்ஸ்ஸில் உள்ள பிரதான யூத அலுவலகம் மீது கார் குண்டு தாக்குதல் சுமார் 100 பேர் பலி.

ஜூலை 23: சிறிலங்கா அரசிற்கு பிரிட்டன் செய்துவரும் ஆயுத விநியோகத்தை நிறுத்துமாறு லண்டனில் புலிகள் ஆர்ப்பட்டம்.

ஆக: போலந்து ஜேர்மனி எல்லைப் பகுதியில் ஆற்றைக் கடக்க முயன்ற எட்டு யாழ் வாசிகள்மரணம்.

ஆக 31: வட அயர்லாந்தில் தாக்குதல் நிறுத்தம் குறித்து ஐ. ஆர். ஏ. அறிவிப்பு.

செப் 03: தமிழகத்தில் குண்டு வெடிப்புகள். மூவர் பலி: 8 பேர் காயம்.

செப் 19: ஹெய்ட்டியில் அமெரிக்கப் படைகள் இறக்கம்.

செப் 28: பால்டிக் கடலில் எஸ்தோனியா பயணிகள் கப்பல் மூழ்கியது 910 பொது மக்கள் - அநேகர் சுவீடனியர்கள் - பலி

ஒக் 12: வட அயர்லாந்தில் பிரிட்டிஷ் இராணுவம் யுத்த நிறுத்தம் அறிவிப்பு.

ஒக்14: நோபல் சமாதானப் பரிசு பாலஸ்தீன தலைவர் அரபாத், இஸ்ரேல் பிரதமர் இட்சாக் ராபின், இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் சேமொன் பெரஸ் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

ஒக் 15; ஹெய்ட்டியின் முன்னாள் தலைவர் ஜீன் பெற்ரன்ட் அரிஸ்டைட் மூன்று வருட அமெரிக்க அஞ்ஞாதவாசம் முடிந்தது ஹெய்ட்டி திரும்பினார்.

ஒக் 26; இஸ்ரேல் - ஜோர்டான் 46 வருடகால பிணக்குகளை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் இரு நாடுகளினதும் எல்லைப் பகுதியில் அரவா எனும் எல்லைகாவல் நிலையத்தில் இஸ்ரேல்பிரதமர்ராபினும் ஜோர்டான் பிரதமர் அப்துல்சலாம் அல்மஜாலி ஆகியோர் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்து.

ஒக் 27; மொசாம்பிக்கின் முதல் சுதந்திர தேர்தல்.

ஒக் 31; தமிழகத்தில் சூறாவளி 26 பேர்பலி

அங்கோலா அரசு - யூனிட்டா கிளர்ச்சியாளர்கள் லுசாக்காவில் சமாதான பேச்சு.

நவ 10: குவைத் சுயாட்சியான நாடு என ஈராக் ஏற்றுக்கொண்டது.

நவ 11: காஸாப் பகுதியில் தற்கொலை தாக்குதல் படையினர் பலி

நவ 20: அங்கோலா அரசு- யூனிட்டா கிளர்ச்சியாளர்கள் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்து

டிச 5; ஆந்திரா கர்நாடக கோவா, சிக்கிம் மாநில இடைத் தேர்தல்கள் தேர்தல் முடிவுகளில் கோவா தவிர்ந்த மற்றைய மூன்று மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி படுதோல்வி

டிச 11: பிரிந்து செல்வதாக கூறிய செச்னிய குடியரசு மீது ரஷ்யப் படையெடுப்பு

டிச 16; வடகொரியாவினுள்நுழைந்தஅமெரிக்க உளவு உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டது. விமானி ஒருவர் பலி மற்றையவர் கைது

டிச 19: முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் காலமானார்

டிச 24: மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங் இராஜினாமா

30 : அமெரிக்க உலங்குவானூர்தி விமானியை விடுவிக்க வடகொரியா இணக்கம்

# கைதாகிய அமெரிக்க பைலட்டை விடுவிக்க வடகொரியா இணக்கம்

(வாஷிங்டன்)

வடகொரிய எல்லையினுள் சுட்டுவீழ்த்தப்பட்ட அமெரிக்க இராணுவ உலங்குவானூர்தியின் பைலட் ஒருவர் விடுதலை செய்யப்படவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது சீப் வோரன்ட் ஒ பிசரான பொபிஹோர என்ற இந்த பைலட்டை விடுவிக்க வடகொரியா இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இருவாரங்களுக்குமுன் இந்த உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டதில் ஒருவர் பலியானார் மற்றையவர் வடகொரிய படையினரால் கைதானார். அமெரிக்க அதிகாரி ஒருவர் வடகொரியா சென்று நடத்திய பலசுற்று நேரடி பேச்சுக்களை தொடர்ந்து இந்த இணக்க நிலை ஏற்பட்டது. கொல்லப்பட்ட மற்றோர் உதவி பைலட்டான டேவிட் ஹல்மனின் சடலம் ஏற்கனவே வடகொரியாவால் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது தெரிந்ததே.

ப்பனால் கடந்த 3 ஆம் திகதி திருமுகை காட்டில் கடத்தப்பட்ட தமிழக காவல் துறை லஞ்ச ஒழிப்பு கண்காணிப்புத் துறை பொறுப்பாளர் சிதம்பரநாதனையும் அவரின் இரு உறவினரையும் தமிழக அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர். எனினும் இந் நடவடிக்கையின் போது வீரப்பன் தப்பிவிட்டதாக கூறப்படுகிறது.

# உலகின் செல்வந்த நாடாக சுவிஸ்சர்லாந்து தெரிவு

## மொசாம்பிக் வறுமை மிக்க நாடு

(ஜெனிவா)

உலகில் செல்வந்த நாடு சுவிஸ்சர்லாந்து என்றும் மிக வறிய நாடு மொசாம்பிக் என்றும் உலகவங்கி இறுதியாக விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. சுவிஸ்வாசி ஒருவருக்கு வருடாந்தம் 36 ஆயிரம் டொலர் வருமானம் கிடைக்கின்றது. மொசாம்பிக் வாசி ஒருவருக்கு வருடாந்தம் 80 டொலர் மட்டுமே வருமானமாக கிடைக்கின்றது என்றும் அவ்வறிக்கை கூறுகின்றது.

சுவிஸ்சுக்கு அடுத்ததாக லக்ஸ்சம்பேர்க்கும் மூன்றாவதாக ஜப்பானும் இடம் பெறுகின்றன, இதே சமயம் முன்னாள் சோவியத் யூனியனின் குடியரசுகளில் எஸ்தோனியா தவிர்ந்த ஏனைய குடியரசுகள் மிக மோசமான பொருளாதார நிலைக்கு சென்றுள்ளதாதவும் உலக வங்கி அறிக்கை கூறுகிறது.

# செச்னியாவில் 3 லட்சம் பேர் அகதிகளாகினர்

செச்சினியா தலைநகர் குரோஸ்னி மீது ரஷ்ய விமானங்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்திவருகின்றன. எனினும் தலைநகருக்கு பிரதான விநியோகப் பாதையாக இருக்கும் ஆர்கு நகரம் இன்னமும் செச்னியா போராளிகள்வசம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 37 ஆயிரம் செச்னியர்கள் அகதிகளாகியுள்ளனர் என ரஷ்யா கூறியுள்ள போதும் 3 லட்சம் பேர் அகதிகளாக உள்ளனர் என ஐ. நா. தொண்டர் ஸ்தாபனங்கள் அறிவித்துள்ளன. இதே வேளை ரஷ்யாவின் தாக்குதலை அமெரிக்கா ஜெர்மனி, துருக்கி, ஈரான் என்பன கண்டித்துள்ளன.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில்
1967-01 15

தாயக மடியில்
1993-12-31

### மேஜர் ஜெயம்|அருள்

பரசுராமன் சோமசிலன்
(திருமலை -குச்சவெளி)

அடிமை விலங்கை உடைக்க
வீறுகொண்ட வேங்கையானவன்
அன்னியப்படையினை துவம்சம் செய்து
தமிழீழ மலர்வுக்கு உரமானவன்.

1994-12-31 இன்று எமதில்லத்தில் நடைபெறும் சகலநிகழ்வுகளிலும் உற்றார், உறவினர், நண்பர்களையும், சகபோராளிகளையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

''நின் பிரிவால் துயருறும்''
-குடும்பத்தினர்

மானிப்பாய் வீதி,
(விறகுகாலை அருகாமை)
ஐந்து சந்தி,

(10541)

**சிந்தனைக்கு..**

அழுகிய பழம் அடுத்ததையும் கெடுக்கும்-
- பெஞ்சமின் பிராங்ளின்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 31-12-94
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 035-2639 நிர்வாகபீடம் 3034
தபால் பெட்டி எண். 05

## யாருக்கு மாநாடு?

தஞ்சாவூரில் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஐந்தாம் திகதி வரை நடைபெறவுள்ள தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு திட்டமிட்ட ரீதியில் இலங்கைத் தமிழ் அறிஞர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இதற்கு இம்மாநாடு தமிழாராய்ச்சி மாநாடு என்றில்லாது தமிழக ஆட்சியாளர்களின் அரசியல் மாநாடாக மாறியதே காரணமாகும். இல்லாது போனால், ஈழத்தமிழரைப் புறக்கணித்து விட்டு ஒரு தமிழாராய்ச்சி மாநாட்டை உலகின் எந்த மூலையிலும் எவ்வாறு நடத்த முடியும்?

உலகத் தமிழ் மக்களில் இரண்டாவது உயர்ந்தளவு எண்ணிக்கையைக் கொண்டவர்கள் இலங்கையிலேயே வாழ்கின்றனர். இங்கு தமக்கென தாயகத்தையும், ஒரு நீண்ட வரலாற்றையும், கலை பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் கொண்டவர்கள் அவர்கள். இங்கு தோன்றிய தமிழ் அறிஞர்கள் பலர் தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்த்தவர்கள்.

அத்தோடு, தமிழுக்காகப் பல ஆயிரம் உயிர்களைப் பலி கொடுத்தும் போராடிக் கொண்டிருப்பவர்கள். இன்று உலகத்தில் தமிழர் என்றால் இலங்கைத் தமிழ் மக்களையே குறிக்கும் நிலைக்கு அவர்களின் வீரம் செறிந்த போராட்டம் ஆக்கியுள்ளது. புறநானூற்றிற்குப் பிறகு தமிழரின் வீரம் செறிந்த போராட்டம் இதுவென போற்றப்படுகின்றது.

இதேசமயம் இலங்கைத் தமிழ்மக்கள் நடத்தும் போராட்டமானது தமிழுக்கு வாழ்வு மட்டும் கொடுக்கவில்லை. வளமும் சேர்த்திருக்கின்றது. தமிழில் நவீன இலக்கிய வரலாற்றில் போராட்ட இலக்கியம் ஒன்றையும் அது சேர்த்துள்ளது. தமிழர் கலை, பண்பாட்டிற்கு புதிய விழுமியங்களைக் கொடுத்துள்ளது. இவ் இலக்கியங்கள் உலகின் வேறு எப்பகுதியிலும் தேடிக் கிடைக்கப் பெறக்கூடியவை அல்ல.

இவற்றிற்கும் மேலாக உலகில் தமிழாராய்ச்சி மாநாடு ஒன்றை நடத்துவதற்கு வித்திட்டவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனிநாயகம் அடிகளாரே முதன்மையானவர். அவரே 1964 ஆம் ஆண்டு ஜனவரியில் புதுடில்லியில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி அமைப்பின் மாநாட்டில் தமிழாராய்ச்சி மாநாடு குறித்துப் பிரேரித்தார். தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தும் குழுவின் இணைச் செயலாளராகவும் தெரிவாகியிருந்தார்.

இது மட்டுமல்ல, முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டை கோலாலம்பூரில் (1964) நடத்துவதற்கு மலேசிய

# சிறிலங்காவில் நடக்கும் சம்பவங்கள் குறித்து சுவிஸ் அரசாங்கம் பெரிதாக எடுப்பதில்லை

## சுவிஸிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர் தகவல்

(வடமராட்சி)

சிறிலங்காவில் நடக்கின்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள், தாக்குதல் சம்பவங்களை சுவிஸ் நாட்டு அரசாங்கம் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை அங்கு நடக்கின்ற சம்பவங்கள் சில மணி நேரத்தில் சீரடைந்து விடுமென அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிப்பர்.

இவ்வாறு சுவிஸில் அகதிகள் அந்தஸ்து கோரி மூன்று வருடங்களுக்கு மேலாக தங்கியிருந்து பின்னர் அந்த நாட்டு அரசினால் திருப்பி அனுப்பப்பட்டவர்களில் பொலிகண்டியைச் சேர்ந்த தங்கவேலு சிவகுமார் அங்குள்ள அகதிகளுக்கு நடப்பவற்றை வடமராட்சி செய்தியாளருக்கு மனமுடைந்த நிலையில் விபரித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், 1991 ம் ஆண்டு நடுப்பகுதியில் நான் அங்கு சென்றிருந்தேன் இற்றைவரை அகதியாகவே இருந்தேன். எங்கள் முகாமுக்கு வருகின்ற அதிகாரிகள் நீங்கள் வெளியேற வேண்டும். கட்டம் கட்டமாக அனுப்ப எமது அரசு முடிவு செய்திருக்கிறது. சிறிலங்காவில் தாக்குதல்கள் எதுவும் பெரிதாக நடப்பதில்லை நீங்கள் உங்கள் நாட்டுக்கு திரும்பவேண்டி வரும் என்பர்.

இதேவேளை நீங்கள் தற்போது உங்கள் நாட்டுக்கு போகத் தேவையில்லை. எமது அரசு அதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கிறது. குறித்த காலத்திற்கு இங்கே தங்கலாம் என்றும் இடையிடையே கூறுவர். இது எமக்கு பழக்கப்பட்ட ஒரு விடயமாக மாறிவந்தது இதை நாங்கள் பெரிதாக பொருட்படுத்துவதில்லை.

இப்படி அதிகாரிகள் கூறிக்கொண்டிருந்தபோது திடீரென குறித்த சிலருக்கு நாட்டுக்கு திரும்புமாறு காலக்கெடு விதிக்கப்பட்டு கடிதங்கள் வந்தன. அவ்வாறாக கடிதங்கள்வந்தவர்களில் நானும் ஒருவர். இதனை ஆட்சேபித்து அங்குள்ள தமிழ் அகதிகள் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள் மேற்கொண்டோம்.

இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை அந் நாட்டு நிறுவனங்கள், ஹோட்டல்களின் அதிகாரிகளின் உதவியுடன் செய்வோம் அவர்களும் எம்முடன் இணைந்து செயற்படுவார்கள். இறுதியில் சுவிஸ் அதிகாரியிடம் மகஜரை கையளிப்போம். அதற்கு அங்குள்ள அதிகாரிகள் மகஜரை மேலிடத்திற்கு அனுப்புவோம் என்று மட்டும் பதில் தருவர். ஆனால் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுவதில்லை.

அங்குள்ள எமது இளைஞர்கள் ஹோட்டல்களிலும், நிறுவனங்களிலும்வேலை செய்வதால் அவர்களுக்கு அங்குள்ளவர்களைக் கொண்டு வேலை செய்து பணம் வழங்குவதைவிட எங்களை வைத்து வேலை செய்விப்பது, அவர்களுக்கு அதிக லாபத்தைக் கொடுக்கும். அதனால் அவர்கள் ஆர்ப்பாட்டங்களில் எம்முடன் இணைவர்.

அங்குள்ள இளைஞர்களை வெளியேறுமாறு அறிவிக்கப்பட்ட பின்னர் இளைஞர்கள் அங்குள்ள மதகுருமாரிடம் சென்று தெரிவித்தனர். அவர் ஆரம்பத்தில் எமது இளைஞர்களுக்கு ஆதரவு வழங்கினார். அதனையடுத்து அங்குள்ள பொலிசார் அவரையும் இது விடயத்தில் எச்சரிக்கை செய்ய முனைந்ததையடுத்து அவர்களது ஆதரவும் எமக்கு இல்லாமல் போய்விட்டது. இவ்வாறான நெருக்கடி நிலையையடுத்து அங்கு இருப்பது எமக்கு சாதகமாக அமையவில்லை. அங்கிருந்து வெளியேறுவதைத் தவிர வேறு எதுவும்செய்யமுடியவில்லைவெளியேற மறுப்பவர்களிடம் அங்குள்ள பொலிசார் விசாவை பறித்து எடுத்து விடுவர். இதனையடுத்து அங்கு தொடர்ந்து இருக்க முடியாது.

மேலும் பலரை கட்டம் கட்டமாக அனுப்பிவருகிறது அநேகமாக அங்கு அகதிகளை இருக்கவைக்காமல் திருப்பி அனுப்புவதே அந்த அரசின் இறுதி முடிவாகவுள்ளது.

அங்குள்ள தொலைக்காட்சியில் இடையிடையே சிறிலங்கா சம்பவங்கள் காட்டப்படும். அதன்போது சந்திரிகாவையும், பேச்சுவார்த்தைகளையும், குண்டுவெடிப்புக்களையும் குறிப்பிட்ட சில நிமிடங்களுக்கு மட்டும் காட்டப்படும்.

சுவிஸில் தங்கும் பெண்கள் கர்ப்பவதியாக இருந்தால் பிரசவம் முடிவடைந்து சில மாதங்கள் வரை தங்க முடியும் அதற்குரிய காலக்கெடு முடிந்ததும் அவர்களையும் வெளியேற்றி வருகிறது. அங்கிருந்து வெளியேறுவோருக்கு 300 பிராங் ஒரு ஆளுக்கு அந் நாட்டு அரசு வழங்குகிறது. அப்பணத்துடன் கட்டுநாயக்காவுக்கு வந்ததும் சிலரிடம் கப்பமாக 200 பிராங் எடுக்கப்படுகிறது. என்னிடமும் 200 பிராங் பணத்தை கப்பமாக எடுத்தனர்.

ஆனால் சிறிலங்காவில் படையினரால் கைதுசெய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சிபார்சுடன் செல்பவர்கள் அங்கு தொடர்ந்து இருக்க அனுமதி கிடைக்கிறது என்றும் கூறினார். (யோ)

# தஞ்சாவூர் தமிழாராய்ச்சி மாநாட்டில் ராவ் கலந்துகொள்ளக் கூடாது

## தமிழக காங்கிரஸ் தீர்மானம்

(சென்னை)

தஞ்சாவூரில் நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கலந்துகொள்ளக் கூடாது என்று இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நேற்று சென்னையில் கூடிய இக் குழு மேற்கொண்ட மற்றுமொரு தீர்மானத்தில், தமிழக அரசு ... றிஞர்களின் உணர்வுகளுக்கும், மதிப்பளிக்கும் வகையில் பிரதமர் ராவ் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாது எனவும் கேட்டுக்கொண்டார். அத்துடன் பிரதமரை தலைவராக கொண்டுள்ள காங்கிரஸ் கட்சிக்கு மரியாதை நிமித்தமாகவாவது அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை எனவும், இவை தொடர்பாக பிரதமரை புதுடில்லியில் நேரில் சந்தித்து 40 நிமிட நேரம் விளக்கியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையில் மாற்றம்

# விபத்தில் காயமடைந்த பெண் மரணம்

யாழ். பெருமாள் கோவிலுக்கு முன்பாக சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்து யாழ் போதனாமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வயோதிபப் பெண் ஒருவர் நேற்றுமாலை மரணமானார்

நேற்று மரணமான இவர் கடந்த ஒருவாரமளவில் யாழ் போதனா மருத்துவமனை அவசர நோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இடம்பெயர்ந்து பெருமாள் கோவிலடியில் வசித்து வந்த புனிதவதி என்பவரே மரணமானவராவார். (சி)

# ஆசிரியர் சம்பளம் வழங்க திறைசேரி நிதி ஒதுக்கியது

(கொழும்பு)

எதிர்வரும் மாதம் அமுல் படுத்தப்படவுள்ள புதிய ஆசிரியர் சேவைக்கான சம்பளக் கொடுப்பனவை வழங்க திறைசேரி நிதி ஒதுக்கியுள்ளது,

இதேவேளை, புதிய ஆசிரியர் சேவை தொடர்பான மேலதிக விபரங்களை கல்வியமைச்சில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இல. செஞ்சிலுவைக்கு உதவிகள் நிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பில்உள்ளஇலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைச் செயலகத்திற்கு வெளிநாடுகள் பலவற்றின் செஞ்சிலுவை நிறுவனங்கள் உதவிகளை நிறுத்தியுள்ளன.

இதனால் தலைமைச் செயலகம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. சங்கத்தின் தலைமைச் செயலகத்திற்கு வெளிநாடுகள் அளித்த நிதியை செஞ்சிலுவை அதிகாரிகள் அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித்தேர்தல்பாராளுமன்ற தேர்தல்களிற்கு பயன்படுத்தியுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது மட்டுமல்ல, முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டை கோலாலம்பூரில் (1964) நடத்துபநற்த மலேசிய அரசாங்கத்தின் உதவியைப் பெற்றவரும் தனிநாயகம் அடிகளாரே ஆகும். இம்மாநாடே பூரணத்துவம் வாய்ந்த ஒரு தமிழாராய்ச்சி மாநாடாக நடந்தேறியது என விமர்சகர்கள் தெரிவிப்பதும் உண்டு.

இதேசமயம் தனிநாயகம் அடிகளார் இம்மாநாட்டை மலேசியாவில் வெற்றிகரமாக நடத்துவதற்கு அங்கு பெரிதும் உதவியவர்களும் அங்கு வாழும் இலங்கையைச் சேர்ந்த - குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் மக்களே ஆகும். இந்தவகையில் தமிழாராய்ச்சி மாநாடு என்பது இலங்கைத் தமிழ்மக்களின் சிந்தனையில் உதித்துச் செயல் வடிவம் பெற்ற தொன்றாகும்,

இதற்கு அப்பால் 1974 இல் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாடே இலங்கை இனப்பிரச்சினையின் திருப்புமுனையாகவும் அமைந்தது. மாநாட்டிற்கு வந்திருந்த தமிழ்மக்கள் இரத்தம் சிந்த வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இவ்வாறாக இலங்கைத் தமிழ் மக்களுடன் பிணைப்புக் கொண்ட தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு இலங்கைத் தமிழருக்கு அழைப்புக்கள் வழங்கப்படவில்லை. வழங்கப்பட்ட ஒரு சிலரையும் ஏதோ கிரிமினல் குற்றவாளிகள் போன்றே தமிழக ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இது இலங்கைத் தமிழருக்கு மட்டுமல்ல உலகத் தமிழினத்திற்கே தமிழக ஆட்சியாளர் இழைத்த துரோகமாகும்.

இதேசமயம் தஞ்சையில் நடைபெறவுள்ள தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழ் ஆராயப்படுமா அன்றி தமிழக ஆட்சியாளர்களின் புகழ் / துதி பாடப்படுமா என்ற மற்றுமொரு கேள்வியும் பலமாகவே உள்ளது. ஏனெனில் தஞ்சை மாநகரை இன்று ஆக்கிரமித்துள்ளது தமிழ்க் கலையும், பண்பாட்டையும் சித்திரிக்கும் காட்சிகள் அல்ல. தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிரமாண்டமான 'கட்அவுட்டுக்களே' ஆகும். இன்று தமிழகத்திலுள்ள சிலர் இதையும் சேர்த்து தமிழினத்தின் இன்றைய கலாசாரம் என்ற ரீதியிலும் விமர்சனம் செய்யக்கூடியவர்கள்,

ஆனால் இவ்வாறானதொரு மாநாட்டில் தமிழ்ப் பண்பாட்டிற்கே முரணாக அழையா விருந்தாளியாக இலங்கையைச் சேர்ந்த சிலர் புகமுனைவதுதான் வேதனை தருகின்றது. இவர்கள் மேற்கொள்ளும் முயற்சியானது இலங்கைத் தமிழ்மக்களுக்கே அவமானகரமானதாகும். இவர்களுக்குத் தமிழை ஆராய ஐந்து நாள் மாநாடு மட்டும்தானா கிடைத்தது. தமிழீழத்தில் இருந்து கொண்டு வாழ்நாள் பூராவும் செய்வதற்கு யார் இவர்களைத் தடுத்தார்கள்?

இக்குழு மேற்கொண்ட மற்றுமொரு தீர்மானத்தில், தமிழக அரசு அரசாங்க நிதியை தவறாக பயன்படுத்துகிறது என்றும், இதில் முறைகேடுகள் இடம்பெறுகிறது என்றும், இதுகுறித்து மத்திய அரசு விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தை தொடர்ந்து செய்தியாளர்கள் மத்தியில் பேசிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தமிழக காங்கிரஸ் உறுப்பினர்களின் உணர்வுகளுக்கும், தமிழாராய்ச்சி மாநாடு நடத்தப்படும் விதம் குறித்து அதிருப்தி அடைந்துள்ள தமிழ

## தலைமையில் மாற்றம்

(டில்லி)

காங்கிரஸ் கட்சியின் பிரசாரக்குழுவில் இருந்து மத்திய மனிதவள மேம்பாட்டு துறையின் முன்னாள் அமைச்சரான அர்ஜுன்சிங் நீக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இந்தியப் பிரதமர் பி.வி.நரசிம்மராவ் டைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், தமிழ்நாடு உட்பட சில மாநிலங்களில் காங்கிரசின் தலைவர்கள் மாற்றப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்தியாவின் அமைச்சரவையில் புதுவருடத்தை தொடர்ந்து மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் கூறப்படுகிறது.

இதனால் தலைமைச் செயலகம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இவ்வாறு செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை செஞ்சிலுவைச் ... தியுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து பெருமளவு நிதி உதவி வழங்கிவரும் வெளிநாடுகள் பல நிதி உதவியை நிறுத்தியுள்ளன.

இதனால் தலைமை அலுவலகம் பாரிய நிதி நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது,

இதன் விளைவாக கிளைகளிற்கு செலுத்த வேண்டிய மாதாந்த உதவித் தொகையை தலைமை அலுவலகம் செலுத்த முடியாமல் உள்ளது.

இதனாலேயே கிளைகளும் வெற்றிகரமாக செயற்பட முடியாமல் உள்ளதாக அந்த உயர் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (இ, நி)

க. பொ. த (சா / த) பரீட்சையில்

## சிறந்த பெறுபேறு பெற்ற 33 மாணவருக்கு பரிசில்

1993ஆம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. (சா/த) பரீட்சையில் நாடளாவிய ரீதியில் முன்னணிப் பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களில் 33 பேருக்கு மக்கள் வங்கியின் புலமைப்பரிசில் கிடைக்கவுள்ளது.

1993 மார்கழி மாதம் க. பொ. த. (சா/த) பரீட்சையில் அதிதிறமைச் சித்தி எய்தியதற்காக மக்கள் வங்கியின் புலமைப் பரிசிலை ஹாட்லிக் கல்லூரி மாணவன் வெஸ்லி தேவசுதன் தேவராஜன், கிளிநொச்சி திருவையாறு யி. எம். ரி. பாடசாலையைச் சேர்ந்த செல்வி சசிநந்தினி தவராஜசிங்கம் ஆகியோர் பெற்றுக் கொள்ள உள்ளனர்.

இவர்களிற்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் ஆறு மாதங்களிற்கு வழங்கப்படவுள்ளது. இவர்களின் பெயரில் எழுதிய காசோலைகளை வடபிராந்திய மக்கள் வங்கியின் முகாமையாளர் தை மாதம் முதலாம் திகதி கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க உள்ளார்.

மக்கள் வங்கியின் 33ஆவது வருட நிறைவு விழாவை ஒட்டி இப்புலமைப் பரிசில் வழங்கப்படவிருக்கின்றது,

இலங்கை பூராகவும் 1994 ஆம் ஆண்டு மார்கழி மாதம் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் அதி திறமைச் சித்தி எய்திய மாணவர்கள் 33 பேரிற்கு இப் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. (இ

## அமெரிக்க விமானியை வடகொரியா விடுவித்தது

(வாஷிங்டன்)

வடகொரியாவின் எல்லைக்குள் உளவறிந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட அமெரிக்க ஹெலிகொப்டர் விமானி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் தென்கொரியாவை நேற்று சென்றடைந்தார். டிசம்பர் மாதம் 17-ம் திகதி ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டபோது அணிந்திருந்த அதே உடையை விமானி பொபிஹோல்ஸ் விடுதலையானபோதும் அணிந்திருந்தார்.

வைத்திய பரிசோதனைக்காக அவர் தென்கொரியாவுக்கு சென்றுள்ளார். விமானியின் விடுதலைக்கு அமெரிக்க தூதுவர் தோமஸ் ஹவார்ட் பின்னணியில் இருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(முன்னர் வந்த செய்தி 6-ம் பக்கத்தில்)

பாப்பரசரின் வருகை ஏற்பாடு

## காலிமுகத்திடலுக்கு செல்ல அடையாளஅட்டைஅவசியம்

(கொழும்பு)

பாப்பரசரின் வருகைக்காக காலி முகத் திடலில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதால் -அங்கு வருவோர் அடையாள அட்டைகளை தம்முடன் எடுத்து வருமாறு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இன்றிலிருந்து காலி முகத்திடலில் வாகனங்களை நிறுத்தி வைப்பதும் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரிலுள்ள கடையொன்றில் தவறவிடப்பட்ட நகை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாள ஆவணங்களுடன் 3-ம் திகதி காலை 11 மணிக்கு கந்தர்மடம் பலாலிவீதியிலுள்ள வருவாய்ப்பகுதிச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## பரீட்சை பெறுபேறுகள்

ஆங்கில உதவி ஆசிரியர் பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் பரீட்சை பெறுபேறுகளும் தபால் மூலம் வந்துள்ளன.

1994-ம்ஆண்டு நடைபெற்ற இப்பாடத்திற்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் புள்ளிகள் வந்துள்ளன. [யோ]

## தேசிய பாடசாலை அதிபர்கள் நியமனம்

(கொழும்பு)

எதிர்வரும் 15-ம் திகதிக்கு முன்பாக பதினாறு தேசிய பாடசாலைகளுக்கான அதிபர்களுக்கு நியமனம் வழங்க இருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதன்படி கொழும்பு றோயல் கல்லூரியின் அதிபராக எஸ் எச் குமாரசிங்கவும். கொழும்பு நாலந்த வித்தியாலய அதிபராக எட்வேர்ட் ரணசிங்கவும், நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் பதின் நான்கு தேசிய பாடசாலைகளுக்கான அதிபர்கள் நியமிக்கப்படுவது தொடர்பாக நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 12. 31**

**சனி இரவு**

08. 01 - அறிவியற்கலசம்
08. 10 - நிகழ்வும் பகிர்வும்
08. 30 - செய்திகள்
08. 40 - சித்திரம் - ந. கிருஷ்ணா எழுதிய "பாமரத் தமிழில் பாவிசைத்த புலவன்"
09. 00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1995. 01. 01**

**ஞாயிறு காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - நீங்கள்கேட்டவை
07. 30 செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.
08. 00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.


# பூமாஞ்சோலை படைமுகாம் அழிப்பில் வீரச்சாவடைந்த போராளிகள்


மேஜர் சத்தியா


மேஜர் துவாரங்கன்


மேஜர் நிதர்சராஜா - நிதேன்


கப்டன் வித்துவான்


கப்டன் இதயராஜன்


லெப். ஆழிக்குமரன்


லெப். அருணகிரிநாதன்


லெப். காண்டீபன்


2-ம் லெப். றமேஸ்







## நினைவுக் கல் திரை நீக்கம்

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் கடந்த வருடம் டிசெம்பர் 30-ம் திகதி கேணல் கிட்டு நினைவாலயத் திறப்பு விழாவின் போது விமானத் தாக்குதலில் மரணித்த பதினொரு பொதுமக்களின் நினைவாக அதேஇடத்தில் நேற்றைய தினம் நினைவுக் கல் திரை நீக்கம் நிகழ்வு இடம் பெற்றது.

சாவகச்சேரி வர்த்தக சங்க தலைவர் திரு. ஜெயக்குமார் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் ஈகச் சுடரினை சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் ஏற்றிவைக்க நினைவுக் கல்லினை இத்தாக்குதலினால் மரணித்த முன்னாள் வர்த்தக சங்கத் தலைவர் திரு. நமசிவாயத்தின் மகன் திரைநீக்கம்செய்துவைத்தார் நினைவுக் கல்லிற்கு தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. வெற்றிச் செல்வன் மலர் மாலை அணிவித்தார். இதனைத்தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன. [86]

# வட-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகா[ண] ஏனைய கட்சிகள் உதவவேண்[டும்]

### அமைச்சர் பீரிஸ் கோரிக்[கை]

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஏனைய அரசியல் கட்சிகள் ஒத்துழைப்புத் தர வேண்டும். இவ்வாறு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கூறியுள்ளார்.

அஸ்கிரியபீட மகாநாயக்க தேரர் வண. பலிப்பான சந்தானந்த தேருடன் இடம் பெற்ற சந்திப்பு ஒன்றில் அமைச்சர் மேலும் கூறுகையில், சுய லாபங்களுக்காக அரசியல் அமைப்பு உருவாக்கப்படக்கூடாது என்றும், இனப் பிரச்சினை தீர்வுக்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது என்றும் [...] தார்.

அந்துடன் பெரு[...] சமூகத்தின் உ[...] தியாகம் செய்யா[...] பிரச்சினைக்குத் [...] முடியும் எனவும் அமைச்சர் சுட்[டிக்காட்டி]னார்.

## ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட நீதிமன்றில் தடயப் பொருட்களின் ஏல விற்பனை இன்று காலை நடைபெறும்.

பாவனைக்கு உதவக் கூடிய பல்வேறு விதமான பொருட்கள் காலை 10.00 மணியளவில் கோயில் வீதியில் உள்ள மேற்படிமன்றில்ஏலவிற்பனை செய்யப்படும் எனதெரிவிக்கப் படுகின்றது. [22]

## அத்தியாவசிய தேவைகள் செயலகத்தில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் அத்தியாவசியசேவைகள், தேவைகள், நிலைமைகள், பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று யாழ். அரச அதிபர் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் புதிய ஆண்டின் திட்டங்கள், சேவைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படும்.

இக் கூட்டத்திற்கு யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் அரச காரியாலயங்கள், திணைக்களங்களைச் சேர்ந்த 62 தலைவர்கள் அழைக்கப் பட்டுள்ளனர்.

- பன்முகப் படுத்தப்பட்ட நிதியின் கீழ் உள்ள திட்டங்கள்.
- பிரமாண அடிப்படையிலான வரவு செலவுத் திட்டம்.
- அமைச்சுக்கள், திணைக்களங்களின் துறைவாரியான திட்டங்கள்
- செயல் திட்டங்களை அமுல் நடத்துவதில் உள்ள பிரச்சினைகள்.

ஆகியவற்றுடன் மேலும் பல விடயங்கள் பற்றியும் இக் கூட்டத்தில் கலந்துரையாடப் படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (தி)

**யாழ்.**

கும் விடயத்தில் இந்த அதிகாரிகள் தொடர்ந்து பின்னடிப்பு செய்து வருகின்றனர். இதனால் பல்கலைக் கழகத்தில் மருந்துப் பொருட்களிற்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ, நி)

**லெப். கேணல்**

★ லெப்டினன்ட்காண்டீபன் நடராஜா லோகராஜா பட்டகளப்பு.

★ 2-ம் லெப். றமேஸ்

## சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

செப்ரிசீமியா நோய்க்கிலக்காகி யாழ் போதனா மருத்துவ மனையில் சிறுமி ஒருவர் மரணமடைந்தார்.

தும்பளை பருத்தித்துறையை சேர்ந்த குணசிங்கம் அனித்கா (வயது 9) என்னும் சிறுமியே நேற்று முன்தினம் செப்ரிசீமியா நோயால் பலியானவராவார். (சி)

**பாப்பரசருக்கு**

தும் ''பப்போ மொபைல்'' என்னும் வாகனத்தை இலங்கை அரசாங்கம் தாம் தயாரித்துத் தருவதாக முன்னர் கூறியிருந்தது.

இவ் வாகனத்தின் உடலின் மேற்பகுதி முழுவதும் கண்ணாடியினால் ஆனது. இதில் இருப்பவர்களைமறைப்பின்றி

## யாழ். வன்னி தொடர்பு சே[வை]

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப் பகு[தி...] செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்[கு...] ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும், கிளி[...] பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அரு[கி]லும் உள்ள கருமபீடங்களிலும் ஓமந்தை சே[...] நிலையத்திலுள்ள கருமபீடத்திலும் செய்தி[...] கப்படுகின்றன.

1. சலுகைச் செய்திகள் முதல் 15 சொற்[களு]க்கும் ரூபா 15/-ம் மேலதிக ஒவ்வொரு [சொல்]லுக்கும் ரூபா 2/-ம் அறவிடப்படும்

2. அழைமைச் செய்திகள் முதல் 10 [சொற்]களுக்கு ரூபா 100/-ம் மேலதிக ஒவ்[வொரு] சொல்லுக்கும் ரூபா 5/-ம் அறவிடப்[படும்]

3. வியாபாரச் செய்திகள் முதல் 10 [சொற்]களுக்கு ரூபா 200/-ம் மேலதிக ஒவ்[வொரு] சொல்லுக்கும் ரூபா 15/-ம் அறவிடப்[படும்]

(மேற் கூறப்பட்ட 1, 2ற்குரிய பதில் [...] வதற்கு ரூபா100/-ம், 3ற்கு ரூபா 200/-[ம் அற]விடப்படும்.)

அவசர கட்டணம் அறவிடப்படும் மேற்குறி[ப்பிட்ட] செய்திகள் உடன் விநியோகிக்கப்படும்.

மேலதிக விபரங்களை அந்த அந்த கரு[மபீடங்]களில் பெற்றுக்கொள்ளலாம். (சி[...])

இப்பொழுது காண்பிக்கப்படுகின்[றது]

யாழ். ஸ்ரீதர் அகலத்திரை[யில்]

தினசரி பி. ப. 2-30க்கு மட்டும்

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் [கழக] நிதர்சனமும் இணைந்து திரைப்படப் தயாரிப்பில் உருவாகிய

ந. கேசவராஜனின்

பிஞ்சு மனம்

(வர்ண முழுநீளப்படம்)

அருணகிரிநாதன்



2-ம் லெப். தவராஜ்



2-ம் லெப். சேகரன்




2-ம் லெப். தயாளன்



வீரவேங்கை
தமிழரசன்



வீரவேங்கை சாத்திரி



வீரவேங்கை சிறீரூபன்



வீரவேங்கை
புரட்சிமாறன்/ராஜித்



வீரவேங்கை
கலாதீபன்

மட்டக்களப்பு மாவட்டம் பூமாஞ்சோலை என்னும் இடத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம் மீது கடந்த 28-ம் திகதி விடுதலைப்புலிகளால்மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்த போராளிகள்

பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ, நி)

## லெப். கேணல்

★ லெப்டினன்ட்காண்டீபன் நடராஜா லோகராஜா பட்டகளப்பு.

★ 2-ம் லெப். றமேஸ் கந்தையா ஜெயந்திரன், மட்டக்களப்பு.

★ 2-ம் லெப். தவராஜ் பாக்கியராசா ஜெகநாதன், அம்பாறை.

★ 2-ம் லெப். சேகரன் செல்லையாவிஜயராசா, அம்பாறை.

★ 2-ம் லெப். தயாளன் கோபாலப்பிள்ளை ஜெகநாதன், மட்டக்களப்பு,

★ வீரவேங்கை தமிழரசன் இளையதம்பி கமலபரன், மட்டக்களப்பு.

★ வீரவேங்கை சாத்திரி சித்திரவேல் சுதாகரன், மட்டக்களப்பு

★ வீரவேங்கை சிறீரூபன், வைரமுத்து விஜயரெட்ணம், மட்டக்களப்பு.

★ வீரவேங்கை புரட்சிமாறன்/ராஜித் அரசமணி சிவகுமார், மட்டக்களப்பு.

★ வீரவேங்கை கலா தீபன் காசித்தம்பிதியாகராஜா, மட்டக்களப்பு.

இப் 18 போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

தும் ''பப்போ மொபைல்'' என்னும் வாகனத்தை இலங்கை அரசாங்கம் தாம் தயாரித்துத் தருவதாக முன்னர் கூறியிருந்தது.

இவ் வாகனத்தின் உடலின் மேற்பகுதி முழுவதும் கண்ணாடியினால் ஆனது. இதில் இருப்பவர்களைமறைப்பின்றி தூரத்தில் இருந்து பார்க்க முடியும். இவ் வண்டியில் குண்டுதுளைக்காத பாதுகாப்பும் உண்டு.

## நட்சத்திர

தென்னிலங்கையில் ஏற்கனவே பல தொழிற்சாலைகளில் இடம்பெற்று வரும் வேலை நிறுத்தம் தற்போது ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் பரவியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பூமாஞ்சோலை

அணியினர் மீது விடுதலைப் புலிகள் பலத்த எதிர்த்தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரிய வரவில்லை.

## வீரச்சாவு

வர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த கப்டன் ஜீவன் [சின்னத்துரை தங்கேஸ்வரன் யாழ்ப்பாணம்] என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் பூபாலசிங்கம்

(துரை) (புறோக்கர்)

மீசாலை மேற்கைச் சேர்ந்த மாணிக்கம் பூபாலசிங்கம் (துரை) (புறோக்கர்) 30-12-94 வெள்ளிக்கிழமை மரணமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31-12-94) அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனக்கிரியைகள் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சகோதரர்கள்

(10551)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ந. கேசவராஜனின்

# பிஞ்சு மனம்

(வர்ண முழுநீளப்படம்)

தினசரி 4-30, 6-30
சனி, ஞாயிறு - 10-30, 4-30, 6

மன்னார் மாவட்ட கலை பண்
கழகம் வழங்கும்

# எல்லைக்கற்கள்

(முழு நீள வர்ணப்படம்)

(சி-11061)

# தொழிற் பயிற்சிக

★ றேடியோ, ரெலிவிசன்,
வீடியோ டெக் றிப்பி

சகல இன ரேடியோ, ரெலிவ
வீடியோ டெக் மற்றும் வேறு எலக்ரே
பொருட்கள் திருத்துதல் ஆரம்பம் முதல்
நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சி
கப்படும்.

காலம்:- 8 மாதம்

விபரங்களை நேரில் பெற்றுக்கொள்ளவு

குறிப்பு: முன்னர் விண்ணப்பித்த மாணவர்
நேரில் தொடர்பு கொள்ளவும்.

★ பயிற்சி ஆரம்பம்:-
09. 01. 1995 (கிழமை நாட்க
07. 01. 1995 (சனி, ஞாயிறு)

விபரங்களிற்கு:-
Jaffna Technical Institu
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாண
(ரெயில்வே கடவை அருகாமை)

(சி-11055)